1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு சித்திரை மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 15-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாள் வருகிறவைகாசிமாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருப்பதாக அறிகின்றோம்.

### காலநிலை

சென்றசிலவாரங்களாக எறித்து வந்த அகோரவெயிலைப்பற்றிக் கர்ணகடூரமாகப் பேசிக்கொள்ளாதபேர்கள் இல்லையெனலாம். ஆனால், சென்ற திங்கட்கிழமைமுதல் இவ்விடம் வானமிருண்டு மழைக்கோலம் அதிகமுண்டாகிச் சிறுகமழைபெய்துகொண்டு வருவதால் அகோரம்நீங்கிக் குளிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பெருமழைக்குரிய கோலம் அதிகமாகக் காணப்படுகின்றது.

### ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாணமேற்றிராசன கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளைச்சேர்ந்த ஆசிரியர்களின் ஞானவொடுக்கம் கொழும்புத்துறைத் தாபனத்தில் நேற்று 20-ந் திகதி புதன்கிழமைபிற்பகல் ஆரம்பமாகியிருக்கிறது. நூறு ஆசிரியர்கள் சமுகமளித்திருக்கின்றனர். மன்னார்க்கட்டளைக்குரவர் வண. எஸ். பீற்றர்சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ்செய்கின்றார். 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை ஞானஒடுக்கம் முடிவாகும்.

### கொழும்பு அதிமேற்றிராணியார்

கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறேஆண்டவர்அவர்கள் நாளை 22-ந் திகதி வெள்ளிக்கிழமை 'சுரியன்டே' எனும்கப்பலில் ரோமாபுரிக்குப் பிரயாணமாகவிருக்கின்றார். இவர்போகும்போது பாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்வதற்காக ரோயல் இலங்கைக் கடற்படையைச்சேர்ந்த திரு. பி. ரி. பெர்னண்டோ அவர்களால் செய்யப்பெற்ற அரியகலைச்சிற்ப வேலைப்பாடமைந்த பொருள்ஒன்றைத் தம்முடன் எடுத்துச்செல்வார். தேக்கமரத்தினால் செய்யப்பட்டுள்ள இந்தக்கலைப்பொருளில் இலங்கைப்படமும், பாப்பரசரின் சிறியஉருவப்படமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

### அரசாங்கசெலவில் குறைவு

1953 – 54-ம் ஆண்டின் அரசிறை வருடத்தின்—அதாவது சென்ற அரசிறைவருடத்தின் வரவுசெலவுத் திட்டத்திலே அரசாங்கம் செலவுசெய்வதற்கென்று பாராளுமன்றம் அனுமதித்தபணம் 44 கோடியே 17 லட்சத்து 70 ஆயிரம்ரூபா. ஆனால், அரசாங்கம் இந்தத்தொகையில்ஏறக்குறையக் கால்வாசிவரை குறைவாகவ்—அதாவது 11 கோடியே 30 லட்சம்ரூபாகுறைத்தே செலவுசெய்திருப்பதாகப் புள்ளிவிபரங்காட்டி அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

### சேன் வின்சென்ற் டி போல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபைப்பந்திகளின் முதலாம் காலவருடக்கூட்டம் இம்மாதம் 24-ந் தேதி ஞாயிறுவாரம் பிற்பகல 5-30மணியளவில் அடைக்கலமாதாகோவிலில் சம்பத்திரிசியார்பந்திச் சாலையில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் நடந்தேறும். எல்லாப்பந்திகளின் அங்கத்தவர்களும் சமுகமளிக்கும்படி வெகு விநயமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### மந்திரிமாரின் பிரயாணம்

இந்திய கைத்தொழில், கமத்தொழில், நீர்ப்பாசன, கிராமஅபிவிர்த்தித் திட்டங்களைச் சுற்றிப் பார்வையிட்டு வருமாறு நிதிமந்திரியார் எம் டி. எச். ஜயவர்த்தன, காணிஅபிவிருத்திமந்திரியார் பி. பி. புலங்குலமை, கைத்தொழில் – வீடமைப்பு–சமூகசேவாமந்திரியார் மேசர் கந்தையா வைத்தியநாதன் ஆகியமூவரும் சென்ற திங்கட்கிழமை ஆகாயவிமானத்தில் இந்தியாசென்றிருக்கின்றனர். இவர்கள் இந்திய அரசாங்கத்தின் விருந்தினராயிருந்து, இந்தியாவில் மூன்றுவாரம் சுற்றுப்பிரயாணஞ் செய்வார்கள்.

### பொலனறுவைக் கச்சேரி

வடமத்திய மாகாணத்திலே இதுவரை பொலனறுவையில் இருந்துவந்த கச்சேரி புதியபட்டினமாகிய பராக்கிரம சமுத்திரத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. இதனை மாற்றியமைக்கும் செலவிற்கென அரசாங்கம் இருபதுலட்சம் ரூபா ஒதுக்கியிருக்கின்றது. பொலனறுவைப்பகுதியின் கல்வி ஆலோசனைக் கம்மிற்றிக்கூட்டத்திலே பொலனறுவை உதவிஅரசாங்கதலைவரால் இது விஷயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஆற்றில்நீராடிய பையன்கள்

கண்டிப்பகுதியிலே அமுனுகாமத்தைச்சேர்ந்த 12 வயதுள்ள தர்மதாசா, 7 வயதுள்ள குடபண்டா, 15 வயதுள்ள பியசேனாஎனும் மூன்றுபையன்களும் சிங்கள புதுவருடப்பிறப்பையிட்டுச் சென்றவெள்ளிக்கிழமை பொல்கொல்லாவில் நடைபெற்ற தேசிய பந்தைய விளையாட்டுகளைப் பார்த்துவிட்டு மத்தியானவேளைக்குச் சற்றுப்பின் பொல்கொல்லஓயாவில் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில்மூழ்கி இறந்துபோனார்கள்.

### புத்த பஞ்சாங்கம்

புத்தஜயந்திவிழாக் கொண்டாட்டத்தை ஞாபகப்படுத்துமாறு புத்தசகாப்தத்துடன்தொடங்கும் நவமான புத்த பஞ்சாங்கம்ஒன்றை அச்சிட்டுப்பாவனைக்குக்கொண்டுவர வேண்டுமென்ற ஓர்அபிப்பிராயத்தை லங்கா போத மண்டலாயம் சமீபத்திலே அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கவிருக்கிறது. அதனால் பர்மாவிற்போல இலங்கையிலும் புத்தசகாப்தத்துடன் சம்பந்தப்பட்டதும், கிறீஸ்துவசகாப்தத்துடன் சம்பந்தப்பட்டதுமான இருவிதகலண்டர்கள் – அதாவது பஞ்சாங்கங்கள் பாவனைக்கு வரவேண்டுமென்பதே இதன்நோக்கமாகும். தற்போது புத்தபோதமண்டலாயம் இதுவிஷயமாய் ஆலோசனை செய்து வருகின்றது.

### கொலைகளின் பெருக்கம்

இவ்வருடத்திலே இந்தச்சித்திர மாதம் 15-ந்திகதியுடன் முடிவான மூன்றரைமாதங்களிலும் – அதாவது 105 தினங்களிலும் 200 கொலைகள் நடந்திருப்பதாய் அறிக்கையிடப் பட்டிருக்கிறது. கடைசியான இருநூறுவதுகொலை, சென்ற 15-ந் திகதியன்று மாறுவிலில்நடைபெறலாயிற்று. இதிலே ஜி. டொன்ஜேம்ஸ் அப்புஹாமி என்பவன் தனதுபுதல்வனான டொன்சைமன் அப்புஹாமியால் குற்றிக்கொல்லப்படலாயினனென அறிவிக்கப்படுகிறது. இந்தச்சித்திரை மாதத்தின் முதல் 15 தினங்களிலும் இலங்கையில் நடைபெற்றுள்ள கொலைகள் மும்பது.

### சம்பாஅரிசியும் வியாபாரிகளும்

திறமான முத்துச்சம்பாஅரிசி படி ஒன்று 52 சதவீதமும், அதிலும் சற்றேஇளக்கமான முத்துச்சம்பாஅரிசி படிஒன்று 46 சதவீதமும் தங்களால் உதவமுடியுமென்று இலங்கைவர்த்தகர்கள் கூறுகின்றார்கள். இந்தவிலைகள் அரசினரால் கொடுபட்டுவரும் பங்கீட்டரிசிவிலையிலும் குறைந்தனவாகும். அரிசியை இறக்குமதிசெய்யும் சுதந்திர வர்த்தகம் இலங்கைவர்த்தகர்களாகிய தங்களுக்கே கொடுபடவேண்டுமென்றும், அங்ஙனம் கொடுபடுமிடத்துப் பிறநாடுகளிலிருந்து தங்களுக்கு அரிசி அனுப்புகிறவர்களுக்கு அந்தஅரிசிக்குப்பதில் இலங்கைவிளைபொருட்களைத் தாங்கள்அனுப்பிவைக்க இயலுமென்றும், இந்தியவர்த்தகர்கள் தற்காலீக வாசிகளாய் இருப்பதாலும், அவர்களுக்குச் சுதேசாபிமானநோக்கம்இராதாகையாலும் அரிசிஇறக்குமதிசெய்ய அவர்களை அனுமதிக்கக்கூடாதென்றும் இலங்கைவர்த்தகர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

### இடதுசாரிகளின் மனக்கவலை

தங்கள்ஆதீனத்தில் இருந்துவந்த ஒருதொகையான தொழிற்சங்கங்கள் தங்களைக்கைவிட்டு ஐக்கியதேசியக் கட்சியுடன் சேர்ந்துகொண்டமையாலே இடதுசாரிக்கட்சிகள் பெரிதும் மனக்கலக்கம் அடைந்திருக்கின்றன. முன்னர் கம்யூனிஸ்த, லங்கா சமசமாஜகட்சிகள் தலைமைவகித்து நடத்திவந்த அநேகதொழிற்சங்கங்கள் தற்போது ஐக்கியதேசியக்கட்சியின் ஆதிக்கத்தின்கீழ் சென்றுவிட்டன. லங்கா சமசமாஜகட்சி தனது அரண்களில் ஒன்றாய்க்கொண்டிருந்தவெள்ளவத்தை மில்தொழிலாளர் ஐக்கியசங்கத்தைத் தற்சமயம் இழந்துவிட்டது. இந்த மில்தொழிலாளருள் ஒருபகுதியினர் ஐக்கியதேசியக்கட்சியின் ஆதரவில் ஓர் தொழிற்சங்கத்தை ஆக்கியிருக்கின்றனர். லங்கா சமசமாஜகட்சி 1935-ம் ஆண்டுமுதல் இந்தமில்தொழிலாளர் ஐக்கியசங்கத்தைத் தனதுகட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருந்தது. இந்தத் தொழிலாளரும் அக்கட்சியை மிக்க பலத்துடன் ஆதரித்துவந்தார்கள் கம்யூனிஸ்தகட்சியும் தனதுகட்டுப்பாட்டில் அடங்கியிருந்த சிலதொழிற்சங்கங்களை ஐக்கியதேசியகட்சியிடம் பறிகொடுத்துவிட்டது. முன்னர் கம்யூனிஸ்டதொழிற்சங்கங்களைச் சேர்ந்திருந்த விப்ரான்கம்பெனித் தொழிலாளர்களும், பி. சி. சி. மில்தொழிலாளரும், ஹறிசன்ஸ் அன் குரோஸ்பீல்ட் தொழிலாளர்களும் ஐக்கியதேசியக் கட்சியின் ஆதரவைப்பெற்ற தொழிற்சங்கங்களில் சேர்ந்துவிட்டார்கள். ஒருதொகையான தங்கள் தொழிற்சங்கங்களை ஐக்கியதேசியகட்சியிடம் பறிகொடுத்தமையானது இடதுசாரிஇயக்கத்துக்குப் பெரியஅடியாகுமென்று லங்கா சமசமாஜகட்சிப்பிரமுகர்ஒருவர் பிரலாபிக்கின்றார்.

### அமெரிக்க வானசாஸ்திரிகள்

இலங்கையிலே வருகிறஆனிமாதம் தோற்றவிருக்கும் பூரணசூரியகிரகணத்தை அவதானிப்பதற்கென்று அமெரிக்க வானசாஸ்திரிகளும், வானொலி–தூரக்காட்சித் தொழில்நுட்பநிபுணர்களும், பத்திரிகைக்காரருமாக 20 பேரைக்கொண்ட கோஷ்டிஒன்று இருபிரிவாக அம்மாதம் 9-ம், 14-ந்திகதிகளிலே ஆகாயவிமானங்களில் கொழும்பு வந்துசேரவிருக்கிறது. ஹார்வாட் சர்வகலாசாலையைச்சேர்ந்த டக்டர் வில்லியம் சின்ரன்அவர்கள் இக்கோஷ்டிக்குத் தலைமைவகிப்பார். அரிசோனாவிலுள்ள லோவெல் அவதானநிலையத்தையும், அரிசோனா அரசாங்ககல்லூரியையுஞ்சேர்ந்த நிபுணர்களும் இதில் அடங்குவார்கள்.

### முத்துச் சலாபம்

தற்போது தூத்துக்குடியில் நடைபெற்றுவருகின்ற முத்துக்குளிக்கும் தொழில்பற்றி ஆராய்ச்சி நடத்திவருமாறு வர்த்தக–கடற்தொழில் மந்திரியாரான திரு. ஷெர்லி கோறெயா அவர்கள் இம்மாதம் 25-ந்திகதி அங்கு செல்லவிருக்கின்றார். இவர்அங்கு விஜயஞ்செய்வதன்நோக்கம், இலங்கையிலே 25 வருடங்களுக்குமேற்பட நடைபெறாமல் நின்றுபோயிருக்கும் முத்துச்சலாபத்துக்குப் புத்துயிர் அளித்து அதனைத் திரும்பவும் தொடக்கிநடத்துவதேயாம். இவர் தமதுநிரந்தர காரியதரிசியான திரு. எஸ். எவ். அமரசிங்க அவர்களோடும், கடற்தொழில் பகுதியைச்சேர்ந்த அதிகாரிகளோடும் அங்குசெல்லுவார்.

### சாராயத்தின் விலையேறும்

தற்போது சாராயம்விட்டு அடைக்கப்பட்டுவரும் போத்தல்களைக் களவாகத்திறந்து அவற்றிலுள்ள சாராயத்தில் ஒருபகுதியை எடுத்துக்கொண்டு பிறகு தண்ணீர்விட்டு அவற்றை நிறைத்து அந்தப்படியே அடைத்துவிடலாம். இந்தத்திருட்டு இனிமேல்நடைபெறாவண்ணம் அவ்விதம்திறக்கமுடியாத புதுமாதிரியான போத்தல்களில் சாராயம்விட்டு அடைக்கப்படவிருக்கிறது. இப்போத்தல்களுக்கு ஏற்படும் கூடிய செலவையிட்டுச் சகலஇனமான சாராயத்தினதும்விலை வருகிறஐப்பசிமாத முதல் 50 சதம் அதிகரிக்கவிருக்கிறது. தேவைப்படும் போத்தல்களெல்லாம் இலங்கையிலேசெய்யப்படுகிறவரையில் ஒருதொகையான போத்தல்கள் ஜப்பானிலிருந்து தருவிக்கப்படும். மதுபரிபாலனபகுதிக்கு மொத்தமாகத் தேவைப்படும்போத்தல்கள் பத்துலட்சமாகும். இப்போத்தல்களில் சாராயம் விலைப்படத் தொடங்கினதும் தவறணைகளில் வெறும்போத்தல்கொடுத்துச் சாராயம்வாங்கும்முறை நின்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கண்ட பரீஸ்

(வண. டி. எஸ். லூர்துசாமி)

(சென்றவாரத் தொடர்ச்சி)

தோட்டங்களிலும், பொருட்காட்சிச் சாலைகளிலும், வீதிகளின் சந்திப்புகளிலும், மாளிகைத்திடல்களிலும் வேறு பலஇடங்களிலும் காணப்படும் கலை வளமிக்க உருவச்சிலைகள் விழிகளுக்கு விருந்தளிக்கின்றன. பரீஸ்நகரில் சிற்பக்கலை பெருவளர்ச்சி அடைந்துள்ளது என்பதற்குத் தக்கசான்று இவைகள் பகருகின்றன. இவைகள்யாவும் வியப்புடன் கவனித்தற்குரிய சிறந்த வேலைப்பாடுள்ளன வெனினும், அவற்றுள் ஒருசில நமதுநாட்டு மனப்பான்மைக்கும், அடக்கவொடுக்கத்துக்கும் ஏற்றனவாயில்லை. அச்சமின்றி, கூச்சமின்றி அவற்றை நிமிர்ந்துபார்க்கவோ, உற்றுப்பார்க்கவோ முடியாது. (பரீஸில் மட்டுமன்று, ஐரோப்பாவின் வேறுசிலநகரங்களிலும் இத்தகைய உருவச்சிலைகளையும், ஓவியங்களையும் காணலாம்). இவற்றைக் கண்டனம் செய்வதற்கில்லை. கலையழகு கொண்டவை என்பதற்காகவே இவற்றை வைத்துக் காப்பாற்றுகின்றனர். ஆகவே, பாராநோக்குடன் தள்ளிக்கொண்டு போகவேண்டியதுதான்.

பரீஸ்நகரின் தலைசிறந்த கலைக்கூடங்களும், அணிகலன்களுமாகத் திகழ்வன அதன் ஆலயங்களே. 'நோத்ர்தாம்' என்ற அதிமேற்றிராசன ஆலயம் உலக அதிசயங்களுள் ஒன்று. இது கோதிக்க (Gothic) முறையில் கட்டப்பட்டுள்ளது. 12-ம் நூற்றாண்டில் (1163) ஆரம்பிக்கப்பட்டு 14-ம் நூற்றாண்டில்தான் இது முடிவுற்றதாம். முகப்பில் மிகவுயர்ந்த இருகோபுரங்கள் உள. தென்கோபுரத்தில் இருக்கும் 'பிக் பென்' (Big Ben) என்றழைக்கப்படும் பிரான்ஸ்தேசத்தின் இரண்டாவது பெரிய கடிகாரமாகும். இந்தஆலயத்தின் ஓவியஎழில்மிக்க கண்ணாடிச்சன்னல்கள் உலகப்பிரசித்தி பெற்றவை. நான் சென்றிருந்த சமயம், இப்போலயத்திற்குமுன்பாகத் தினமும் மாலையில் யேசுவின்திருப்பாடுகள் திறம்பட நடித்துக் காட்டப்பட்டன. சுமார் 400 நடிகர்கள் விசாலமான ஆலயமுற்றத்தைமேடையாகவும், உயர்ந்தகோபுரங்களை மோட்சமாகவும், அண்மையில் தோண்டப்பட்டிருந்தபடுகுழியை நரகமாகவும் கொண்டு, சிறந்தஒலி, ஒளிச்சாதனங்களுடன் உள்ளஉருகுமாறு இயற்கையான முறையில் நடித்தனர். (சம்பிரதாய நாடகமுறையையும், ஐரோப்பிய நாடகமுறையையும் ஒப்பிட்டுத் தனிப்பட ஒருகட்டுரைவரையலாம்).

புகழ்வாய்ந்த மற்றொரு போலயம் 'மோன் மார்த்தர்' என்ற குன்றின் மீதுள்ள திருஇருதய ஆண்டவரது திருசேத்திரம். வெள்ளைக் கட்டடம். எங்கிருந்து பார்த்தாலும் எடுப்பாகக் காட்சியளிக்கின்றது. உயர்ந்தஇடத்திலுள்ள இவ்வாலயத்தைஅணுக அழகியபடிகள் அமைக்கப்பட்டுள்ளன. படிகளைக் கடந்துசெல்வது கஷ்டமாயிருப்பின், குன்றின்சரிவில் இரும்புவடங்களின்மீது ஏறியிறங்கும் "புனிக்குலேர்" (Funiculaire) என்ற வாகனத்தை உபயோகிக்கொள்ளலாம். ஆலயத்தில் ஆண்டுமுழுவதும் அல்லும்பகலும் சதா திவ்வியநற்கருணைச்சந்திப்பு நடந்துகொண்டே யிருக்கின்றது. யௌவனமிகுந்த இருசம்மனசுகள் ஏந்திநிற்கும் கதிர்ப்பாத்திரத்தில நற்கருணைநாதர் காட்சியளிக்கின்றார். முற்றிலும் வெள்ளியாலாகிய மனிதஉயரச் சுருபங்கள் இரண்டும் (திருஇருதயஆண்டவர், தேவதாய்), பெயர்பெற்ற "மோசேய்க்" ஓவியங்களைக் கொண்ட பிரசங்கத்தொட்டி, மேற்கூரை, கிருசி, பீடங்களும், உயர்ந்த தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கிவசதியும், பலதரப்பட்ட பணிகளுக்குப் பயன்படுவதாய்ஆலயத்திற்குட்புறமுள்ள சாங்கப்பகுதியும், வானளாவிய கோபுரத்தில் இருக்கும் 'சாவோயார்த்' (Savoyarde) என்ற பிரான்சின்மிகப் பெரியமணியும் இந்தஆலயத்தின்விசித்திரங்கள்.

ஆலயமுற்றத்தில் நின்று பரீஸ்நகரின் முழுத்தோற்றத்தையும் விழிகளாரக் கண்டுமகிழலாம். ஜெருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட நமதுஆண்டவரின் முண்முடியையும், திருச்சிலுவையின் ஒருபகுதியையும் வைத்துக் காப்பதற்காக அர்ச். லூயிஸ்மன்னனால் 1245-1248-ம் ஆண்டுகளில் கட்டப்பட்ட 'சேன்த்-ஷப்பேல்' (Sainte-Chapelle) என்றசிற்றாலயம் பொருத்த நிமித்தமான அளவுகளைக்கொண்ட கோதிக்கக் கலைச் சின்னங்களுள் முதலிடம் வகிக்கின்றது. (மேற்கூறிய முண்முடியும், திருச்சிலுவையின் பகுதியும் இன்று 'நோத்ர்தாம்' என்ற மேற்றிராசன ஆலயப் பொக்கிஷத்தில் இருக்கின்றன). அர்ச். ஜெர்மேன்-தெ-ப்ரே என்றஆலயம் பரீஸின் மிகப்பூர்விக கோயில். (10-ம் நூற்றாண்டு). உயர்ந்த வேலைப்பாடுகொண்ட வேறுபல ஆலயங்களும் அந்நகரில் உள்ளன. எண்ணிக்கையில் எழுபதுக்கு மேற்பட்டன. ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு வர்ணிக்கப்புகின் இக்கட்டுரை ஒருபுத்தகமாகிவிடும்.

ஆலயங்கள்மட்டுமன்றி, கண்டுகளித்துப்பிரமிக்கத்தக்க கலைச்சின்னங்களும் வேறுபலஉள. எடுத்துக்காட்டாக, முற்றிலும் இரும்புச் சட்டங்களாலேயே கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான எய்ஃபல் கோபுரம் (Tour Eiffel) உலகிலேயேமிகஉயர்ந்தது (985அடி). 1887-ம் ஆண்டு எய்ஃபல்என்ற கட்டடக் கலைஞரால் அமைக்கப்பட்டதாகும். மூன்றுமெத்தைகளை உடைத்து. ஏறி இறங்கப் படிகளும், மின்சக்தி ஊர்திகளும் (Lifts) உள. உலகின் பலதிசைகளிலுமிருந்து வரும் உல்லாசப்பிரயாணிகள் தொழில்நுட்பமிக்க இக்கோபுரத்தைக் கண்டு வியந்து சொக்கி நிற்கின்றனர். நாள்முழுவதும் ஈக்கள்மொய்ப்பதுபோல் இதன்மேல் ஏறிஇறங்கியவண்ணமாய் இருக்கின்றனர். ஒவ்வொருமெத்தையிலும் சிற்றுண்டிச் சாலைகளும், இதாகடைகளும், சாவதானமாகஉட்கார்ந்து அயர்ந்துபேச விசாலமான இடவசதிகளும் உண்டு. முதல்மெத்தையிலேயே வானத்தை எட்டிப்பிடித்து விட்டாற்போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. பெயர்போன இந்தக்கோபுரம் கலைச்சின்னமாயிருப்பது மட்டுமின்றி, உலகின் பலபகுதிகளுடனும் கம்பியில்லாத் தந்திப்போக்குவரத்து வைத்துக்கொள்வதற்கான அரியசாதனமாயும் பயன்படுகின்றது.

லூவ்ர், க்ளுநி, ரோதன் முதலிய பெரிய பொருட்காட்சிச் சாலைகள் — பிரான்சின் மற்றப் பகுதிகளுக்கும் இதர ஐரோப்பியநாடுகளுக்கும் சென்றுவரும் றெயின்வண்டிகளுக்காக, ஒவ்வொருதிசைக்கும்ஒன்றுஎன்று தனித்தனியே நகரின்பலபகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்கள் — பலவகைப்பட்ட அரசாங்க கட்டடங்கள் —படைத்தலைவர்களின் பயிற்சிநிலையம் — 'சொர்போன்' பற்கலைக்கழகம் — நெப்போலியன், நெப்போலியனது மகன் முதலியோர் அடக்கஞ்செய்யப்பட்டிருக்கும் கோயில் — பண்டைய யுத்த தளவாடங்கள், நெப்போலியன் 'சேந்த் எலேன்' என்றதீவில் கழித்த வாழ்வின் கடைசிநாட்களோடு சம்பந்தப்பட்ட பொருட்கள் (ஆடையாபரணங்கள், படுக்கை, நாற்காலி எழுதுகோல், கடிகாரம், உண்கலன்கள், இன்னும் மற்றதட்டுமுட்டுகள்) வைக்கப்பட்டிருக்கும் 'இனவாலிட்' என்றஇடம் — இவ்வாறு பரீஸ்நகரில் பார்க்கத்தகுந்த—நான் கண்டுகளித்த காரியங்கள் பலஉள. [illegible] குறிப்பிட்டு வர்[illegible] யெண்க.

# சபிக்கப் பட்டவர்களே! என்னைவிட் டகன்று......

(சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா)

(சென்றவாரத் தொடர்ச்சி)

மரணத்திலும் இருவகைஉண்டு. ஒன்று, அநித்தியசரீரமரணம். மற்றது, நித்திய ஆத்துமமரணம். ஆத்துமம்பிரியும்போது நமதுசரீரம் உத்தானநாள் வரைக்கும் சவக்காலையில் — கல்லறையில் மண்ணோடுமண்ணாய்க்கிடந்து உக்கி இளைப்பாறும். இதுவே அநித்தியமரணம். ஆத்துமத்தின் நித்தியமரணம் என்பதை ஆராய்வோம். அந்தஆத்துமம் உடலைவிட்டுப் பிரியும்போது சாவானபாவத்தினால் தேவஇஷ்டப்பிரசாதம்என்னும் ஞானஉயிரைப் போக்கடித்திருக்குமானால் பிறகு அதற்கு மீட்சியேஇல்லை. அதாவது, அந்த ஆத்துமம் மோட்சத்துக்குச் செத்ததாய் நரகத்திலே புதைக்கப்படுகின்றது. அதுஇனிமேல் அங்கிருந்து எக்காலமும் — நித்தியத்துக்கும் மீளவேமுடியாது. இதுவே ஆத்துமத்தின் நித்திய மரணம். ஆகவே, இறந்துபோன ஒரு மனிதன் மீண்டுஉயிர்பெற்று இந்தஉலகத்துக்கு வாமுடியாதது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவுநிச்சயம் நரகத்துக்குத் தீர்ப்பிடப்பட்டஆத்துமம் அங்கிருந்து நித்தியத்துக்கும் மீளமுடியாது என்பது. அதாவது, நரகமே அதன் நித்திய சிறைச்சாலை. உதாரணமாக, இந்தஉலக அரசாங்கத்திலே ஒரு கொலைக்குற்றவாளியை ஒன்றில் மரணதண்டனைக்கு, அல்லது சதாகால மறியல்தண்டனைக்குத் தீர்த்துவிடுகிறார்கள். உலகில் ஒருவன்செய்யும் சட்டவிரோதமான குற்றங்களிலே கொலைக்குற்றம் மிகப்பாரதூரமானது. அதற்கு மன்னிப்புக்கிடையாது. மரணத்தீர்வை அவனுடையஉயிருக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும். இங்குகுறிப்பிடும் சதாகாலம்என்பது அவன் இயற்கைப்பிரகாரம் மரணம்அடையும் காலஎல்லையைப் பொறுத்ததாகும்.

ஆனால், ஆத்துமத்தைக்குறிக்கும் நித்திய மரணதண்டனை, அல்லது நித்தியஊழிய மறியல் என்பது அப்படியன்று. அது நித்தியத்துக்கும் நீடிக்கும். ஏனெனில், ஆத்துமம் சாவதில்லை. ஆகவே, "நித்திய" மென்றால் என்ன? சதாகாலம் — ஊழியுள்ள காலம் — அனவரதகாலம் — எல்லை இல்லாதகாலமேயாகும். பூவுலகிலுள்ள மணல்மணிகளை எண்ணிக் கணக்கிட்டாலும்—சமுத்திரம்முதலாம் நீர்நிலையங்களிலுள்ள நீரைத் துளிதுளியாய் எண்ணிக் கணக்கிட்டாலும் — மரங்களிலுள்ள எல்லாஇலைகளையும் எண்ணிக் கணக்கிட்டாலும் — வானமண்டலத்திலுள்ள எல்லாநட்சத்திரங்களையும் எண்ணிக்கணக்கிட்டாலும் நித்தியத்தின் காலஎல்லையைக் கணக்கிடமுடியாது. ஆஸ்பத்திரிகளிலே பஞ்சணைமெத்தையில் ஒருபத்துநாளைக்கே படுத்துக் கிடக்கமுடியாது. துண்டைவெட்டிவிடும்படி டக்றர்மாரோடு சச்சரவென்றால், இவ்விதம் எல்லையேயற்ற ஊழியுள்ளகாலம் நெருப்புக் கட்டியில் கிடந்து பிசாசுகள்செய்யும் சித்திரவதைக்குள்ளாகும்போது எப்படிச் சகிக்கலாம்! தாங்கலாம்! அநுபவிக்கலாம்! நினைக்கவே உரோமஞ்சிலிர்க்கிறதன்றோ!

நிற்க, தனித்தீர்வை எப்போதுநடக்கும்? என்னவிதமாக நடக்கும்? என்றகேள்விகளில் இறங்குவோம். நாம்இறக்கும் அந்தச்சணத்திலேயே தனித்தீர்வை நடக்கும். அப்பொழுது மரணத்தின் பாதுகாவலரும், இறந்த ஒருவரின் ஆத்துமத்தைத் தேவநீதிச் சிம்மாசனத்தின் முன்பாகக் கொண்டு போய்நிறுத்தும் பொறுப்பைக்கொண்டவருமாகிய அதிதூதரான அர்ச். மிக்கேல்சம்மனசானவர் அந்த ஆத்துமத்தை [illegible]த்தின்முன்பாக நிறுத்துவார். அந்தத் தீர்வையின்போது அவருடன் நமது காவல்சம்மனசும், மரணவேளை நமக்கு உதவிபுரியுமாறு நாம் மன்றாட்டம்செய்துவந்த அர்ச்சியசிஷ்டர்களும், நாம்கட்டிக்கொண்ட பாவங்களுக்குத் தூண்டுதலாயிருந்த பிசாசுகளுமேயன்றி நமக்குஉதவியாக "உன்னோடு உடன்கட்டைஏறுவேன்—உயிரை விடுவேன் — பிறகே நானும் வருவேன்" என்றுசொல்லிய நம்மவர்களில் ஒருவராவது அங்குநிற்கமாட்டார்கள். ஆக, நாம் உலகசீவியத்தில் செய்துகொண்ட "பாவ புண்ணியம்" மாத்திரம் நம்மைப் பின்தொடர்ந்து வரும் இருதுணைவர்களாகும். "மனிதர் ஒரேதரம் மரிக்கவும், அதன்பின் நடுத்தீர்க்கப்படவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறார்கள்" (எபி. 9: 27), "அவனவனுடைய கிரிகைகளுக்குத்தக்கபடி சர்வேசுரன் அவனவனுக்குப் பதிலளிக்கும்படி" (உரோ. 2: 6.), "நாமெல்லோரும் கிறீஸ்துநாதருடைய நியாயாசனத்துக்குமுன்பாக நிறுத்தப்படுவோம்" (உரோ. 14: 10.) என்னும் வேதவாக்கியங்களின்படி இறந்தவரின் ஆத்துமம் அவ்விதம் நிறுத்தப்பட்டபின், அந்தஆத்துமத்தைப்பற்றி இருகட்சிகளுக்குமிடையே விவாதம்நடக்கும். தீர்வை ஆண்டவரைப் பொறுத்தது.

இந்தத்தீர்ப்பு வெளியாகும்வரை அந்தஆத்துமம் படும்பாடு அம்மம்ம!... இதோ தீர்வைநேரமும் வந்துவிட்டது! என்னதீர்வை? நரகத்தீர்வைதான். முடிந்ததுமுற்றும். இனிமேல் இத்தீர்ப்புக்கு 'அப்பீல்' என்பதே கிடையாது. ஏனெனில், இது மனிததீர்ப்பல்ல. "என்தீர்ப்பு நீதியுள்ளது" (அரு. 5 : 30.) என்றுஉரைத்த நீதிபாரின்தீர்ப்பு. எனவே, இந்தஅதிர்ஷ்டங்கெட்ட நிர்ப்பாக்கியஆத்துமம் நரகத்தீர்வைக் குள்ளானதும் கோழிக்குஞ்சைப் பருந்துவிழுந்தடித்து இறுஞ்சிக்கொண்டு போவதைப்போன்று அதனைப்பிசாசுகள் நரகச் சங்கிலியால் இறுகக்கட்டி நரகபாதாளத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அங்கே இந்தஆத்துமத்துக்கு நடப்பதென்ன? ஊழியுள்ளகாலமட்டும் ஆக்கினை. நித்தியசித்திரவதை. இந்தஆத்துமம் தன் பூலோகசீவியத்தில் என்னென்ன பாவங்களுக்குத் தன்னை அடிமையாகக் கையளித்ததோ, அந்தந்தப்பாவங்களுக்கேற்ற தண்டனையைப்பெறும். அது மோகபாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தால் அதற்குஉடந்தையாயிருந்த அவயவங்களெல்லாம் மகாகொடூரமாய் உபாதிக்கப்படும்.

மோகபாவிகள் நரகத்தில்அனுபவிக்கும் மனோவாக்குக்கெட்டாத வேதனையை அர்ச். பெரியதெரேசம்மாளுக்குக் காட்சியில்காணபிக்கத் தேவன் திருவுளமானார். இந்தக்காட்சியிலே அவளுடையஆத்துமமும், காவல்சம்மனசும் ஓர்பக்கமாய் நரகத்தைப் பார்வையிட்டு வரும்போது, ஓர்கூட்டம்பிசாசுகள் நெருப்புத்தணலையொத்த பலவித சித்திரவதைக்கருவிகளுடன் ஓர்நெருப்புக்கட்டிலைச் சுற்றிவர உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அப்பொழுதுஆத்துமம் சம்மனசானவரைநோக்கி: "இந்தப்பிசாசுகள் யாரைக்காத்துக்கொண் டிருக்கின்றன?" என்றுகேட்டது. அதற்குச் சம்மனசானவர்: "உன்னைத்தான்" என்றார். ஆத்துமம் திடுக்கிட்டுப் போய், "ஏன்? என்ன பாவத்துக்காக?" என்றுகேட்டதும், சம்மனசானவர் அதைநோக்கி, "நீ இன்னுரிலே தகாதநேசம் வைத்திருக்கின்றாய்; அதற்காகத்தான்" என்றதும் காட்சிமறைந்தது. அர்ச். தெரேசம்மாள்கட்டிக் கொண்டபாவம்மனதினால்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பத்திரிகாசிரியரும் பாப்பரசரும்

தமது அலுவல்களை மேலும் அதிகமாக்கிக்கொண்டுவருகிற பரிசுத்தபாப்பரசர் அன்று சனிக்கிழமை 250 பத்திரிகைகளின் பிரதிநிதிகளாய் ஐரோப்பாவிலும், மத்தியகிழக்குநாடுகளிலும் சுற்றுப்பிரயாணஞ்செய்துவருகின்ற அமெரிக்க பத்திரிகாசிரியர்களின் குழுவொன்றுக்கு விசேஷபேட்டி அருளலாயினர். இந்தக் குழுவின் தலைவர் அவ்வேளை அவரை நோக்கி: “எங்கள்தொழிலுக்குரிய கஷ்டமான அலுவல்களைச் செய்வதிலே எங்களுக்கு அபார ஒத்தாசையாக” ஓர் விசேஷ ஆசீர்வாதம் அருளுமாறு அவரைக்கேட்டுநின்றார்.

### ருஷியாவும் பாஸ்குத்திருநாளும்

ஈஸ்றர்ஞாயிறு எனப்படும் பாஸ்குஞாயிறன்று ருஷியாவைப்பற்றி எப்போதுமே கத்தோலிக்கர்பலரும் அதிகமாகச் சிந்திப்பார்கள். அதற்குக்காரணம், ருஷியமக்கள் அன்றுகாலை “கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தருளினார்” என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கூறியும், ஒருவருக்கொருவர் சமாதான முத்தங்கொடுத்தும் பிரசித்த கொண்டாட்டம் நடத்தும் வழக்கமுடையவர்களாய் இருந்தார்கள். உத்தானநாதர் பேரால் அர்ப்பணஞ்செய்யப்பெற்ற அநேககோவில்களை அக்காலத்திலே அவர்கள் கொண்டிருந்தார்கள். அதே நாமத்துடன் ருஷியாவில் அநேக முனிவர்ஆச்சிரமங்களும், சந்நியாசசபைகளும் இருந்தன. அதனால் ஈஸ்றர்ஞாயிறன்று உலகிலுள்ள கத்தோலிக்கமக்கள்பலரும் ருஷியாவை நினைவுகூருவார்கள். தனது நீடியபாடுகளும், சிலுவைமரணமும் முடிவடைந்து திரும்பவும் அது உத்தானமாகி இரட்சகராகிய கிறீஸ்துநாதருடன் முன்னர்எக்காலத்தும் இல்லாதவிதமாய் அது ஐக்கியப்படும்படியாய் மிகுந்த பக்திவேகத்துடன் மன்றாடுவார்கள்.

### இருபதுவருடத் திருயாத்திரை

மதலேன் அல்போன்சின் பூச்சே எனும்மாது கடந்தஇருபதுவருடகாலமாக யாத்திரை செய்து வருகின்றாள். இத்தனை வருடகாலத்திலும் அவள் கால்நடையாக 1,25,000 மைலுக்கு மேல் பிரயாணஞ்செய்து, தனக்குச் சொந்தமானவைகளையெல்லாம் தன்னோடு எடுத்துக்கொண்டு ஐரோப்பாவிலுள்ள திருசேத்திரங்களைத் தரிசித்து வந்திருக்கிறாள். பிரான்சிலே மொண்பெல்லியர் பட்டினத்திற் பிறந்தஇவளுக்குத் தற்போது வயது 54. மத்தியகாலங்களிற் போன்று பதமையான ஓர்யாத்திரிகரைப்போன்று தனது விசுவாசத்தையே கேடயமாகக் கொண்டு இவள் தனதுஉணவுக்கும், உறைவிடத்துக்கும் தேவபராமரிக்கையிலேயே நம்பிக்கைவைத்துத் தன்னுடைய இல்லத்தைவிட்டுப் புறப்பட்டாள். கடந்த இருபதுவருடகாலத்திலும் இவள் கடுமையானவெப்பத்திலும், குளிரிலும் நடமாடி, தான்போனபோன இடங்களிலுள்ள மக்களின்தருமத்தைக்கொண்டும், தான்தங்கியிருந்த கன்னிகாமடங்கள் உபகரித்த நன்கொடைகளைப்பெற்றும் உயிர்வாழ்ந்திருக்கின்றாள். பாத்திமாவிலுள்ள கன்னிகாமடம்ஒன்றின் சிரேஷ்டதாயார் உபகரித்த சில்லுள்ள பெட்டி ஒன்றிலே தனக்குச்சொந்தமானவைகளைவைத்துத் தள்ளிக்கொண்டு தனதுயாத்திரையை இவள்நடத்திவருகின்றாள்.

### சங். அல்போன்சா கன்னியாஸ்திரி

மலையாளத்திலே பாரனன்கானம் எனுமிடத்தில் பரிசுத்தம் பரிமளிக்கச் சீவித்திருந்து பரமபதமடைந்த சங். அல்போன்சா கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறு பெற்றபட்டம் சூட்டுவிக்கும்விஷயமாய் அவளுடைய புனிதவாழ்க்கையையும், புண்ணியங்களையும, அவள்சலுகையால் நடைபெற்ற புதுமைகளையும்பற்றி விசாரணைசெய்யுமாறு பாலாய்மேற்றிராணியாராலே சென்றமாசி 11-ந் திகதியன்று அமைக்கப்பட்ட மேற்றிராசன நீதிமன்றமானது சென்றபங்குனிமாதம் 25-ந் திகதியன்றுகூடி விசாரணையைத் தொடக்கியிருக்கின்றது. திருச்சபைநடுவர்கள் மூவரும், வேதவிருத்தியாளரும், நொத்தாரிஸ்மாரும் அன்றுகாலை 10 மணிக்கு அங்குள்ள கிளாரம்மாள்மடத்திலே செபத்துடன் விசாரணையை ஆரம்பித்தனர். விசாரணை செய்யப்படுமாறு 52 பேரின்நாமங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மூந்த ஓர்கன்னியாஸ்திரி விசுவாசப்பிரமாணஞ் செய்துகொண்டதும் விசாரணை செய்யப்படலாயினள். இந்த ஒருசாட்சியையும் விசாரணை செய்துமுடிய அநேகதினங்கள் செல்லும். எல்லாம்அந்தரங்கமாக நடைபெறுவதால் விசாரணையைப்பற்றி ஒன்றுமே வெளிவருவதாயில்லை.

### ஆசா. தமியான்சுவாமியார்

மொலக்காய்தீவுக் குஷ்டரோகர்களின் அப்போஸ்தலரான ஆசா. தமியான்சுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கானவிசாரணை றோமாபுரியிலே சென்றபங்குனிமாத நடுப்பகுதியில் முறைப்படியே தொடக்கப்பட்டுள்ளது. மூந்த அவரது வீரத்துவ புண்ணியங்களும், அவற்றைத்தொடர்ந்து அவர்சலுகையால் நடைபெற்றனவென்று ஆரோபிக்கப்படும் புதுமைகளும் ஆராய்ச்சி செய்யப்படும். இந்தப்புதுமைகளில், அவர்சலுகையால் கார்மேல்சபையைச்சேர்ந்த ஓர்கன்னியாஸ்திரி அற்புதவிதமாகச் செவிடுநீங்கிக் குணமடைந்ததும் ஒன்றாகும். புதியமெக்சிக்கோவைச்சேர்ந்த சாந்தபீஎனுமிடத்திலுள்ள மாசில்லாத இருதய கார்மேல்மடத்தைச்சேர்ந்த இந்தக்கன்னியாஸ்திரி சென்றவருட கோடைகாலத்தில் ஏற்பட்டநோய்காரணமாகச் செவிடாயினாள். கத்தோலிக்கர்அல்லாத வைத்தியநிபுணர்ஒருவர் தகுந்தசிகிச்சைசெய்தும் குணம் ஏற்படவில்லை. கடைசியாக ஆசா. தமியான்சுவாமியாரின் திருப்பண்டம் ஒன்றைவைத்து, நவநாட்கள் செய்ததும் முன்சொன்ன வைத்தியநிபுணரே பிரமிக்கும்படியாக அற்புதவிதமாய் அவள்குணமடைந்தாள்.

### பாப்புமாரும் தபால்முத்திரைகளும்

மத்திய அமெரிக்காவிலுள்ள பனமாநாட்டுஅரசாங்கம் தபால் முத்திரைகளிலே பாப்புமாரின் சரிதையை விரைவில் வெளியிடவிருக்கின்றது. இந்தமுத்திரைகளின் விற்பனவிலிருந்து கிடைக்கும்வருமானத்தில் பத்தில்ஒருபங்கு அந்நாட்டிலுள்ள கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்கப்படவிருக்கிறது. “கம்யூனிஸத்தின் கொடுங்கோன்மையும், பிளவையுண்டுபண்ணுவதுமான சக்திகளைஎதிர்த்து, ஓர் பெரும் சர்வதேச சமாதான முயற்சியைச் சாதித்துள்ளவரான பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசருக்கு ஓர்வந்தனை வழிபாடாக இந்தமுத்திரைகளை உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால்களில் பாவிப்பதற்குப் பனமாஅரசாங்கம் அதிகாரம் வழங்கியுள்ளது. இந்தத்தபால் முத்திரைகள் அர்ச். பேதுருவானவர்முதல் தற்போதைய பரிசுத்தபாப்பரசர் வரையுள்ள சகலபாப்புமாரையும் கௌரவித்துப் பெயர்பெயராகத் தொடர்ந்து வெளிகொண்டிருக்கும். முதற்குழுவைச் சேர்ந்த முத்திரைகள் பத்திநாதர்என்ற பெயர்கொண்ட பன்னிருபாப்புமார்களினதும் பிரதிமைகளையும், சரிதையையும் அடக்கியிருக்கும். இந்தக்குழுவில் 19 கோடியே 50 லட்சம்முத்திரைகள் வெளியிடப்படும். இவற்றின் பெறுமதி 3 கோடிபவுணாகும்.

### ஆசா. பேசில் மொறோசுவாமியார்

அர்ச். சூசையப்பரின் அப்போஸ்தலரென அறியப்படுகின்ற ஆசா. சின்ன அந்திரேபிறதர் சேர்ந்திருந்த சந்நியாசசபையாகிய திருச்சிலுவைச்சபையை அடியிட்டவரான ஆசா. பேசில் மொறோசுவாமியாருக்கும் முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கானவிசாரணையையும் தொடக்குவதுபற்றித் திருச்சடங்காசார திருச்சங்கம் கலந்துவிவாதித்திருக்கிறது. ஆசா. மொறோசுவாமியார் இற்றைக்கு 82 வருடங்களின்முன் பரமபதமடைந்தார். பிரான்ஸ் தேசத்தில் பிறந்தஇவர் மரிக்கும்போது அந்திரேபிறதர் ஏறக்குறைய 28 வயதுடையவராயிருந்தார். அந்திரேபிறதரைப்போலவே இவரும் ஓர் வறியகுடும்பத்தில்பிறந்தவர்.

### பாப்பரசரின் சோபனவாழ்த்து

பிரித்தானியஅரசின் பிரதமராய்விளங்கியிருந்த சேர்வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்கள் தம்பதவியை இராசிநாமாச்செய்தபின் அங்கே தமதுகிராமப்புறவாசஸ்தலமாகிய சாட்வெல்எனுமிடத்தில் தம்முடைய ஈஸ்றர் விடுமுறையைக் கழித்துவருகையில், பிரதமமந்திரியார் என்றமட்டிலே அவர்இளைப்பாறியதை முன்னிட்டுப் 12-ம் பத்திநாத பாப்பரசரிடமிருந்து வாழ்த்துத் தந்திச்செய்திஒன்றைச் சென்ற 13-ந் திகதியன்று பெற்றுள்ளாரெனத் தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. “பிரதமராயிருந்து தாங்கள் ஆற்றியுள்ள நீண்டகாலசேவை முடிவடைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்திலே நமதுகாந்தலான சோபனவாழ்த்தைத் தெரிவித்து, தங்கள்சுகத்துக்கும், சேமவாழ்விற்குமாக நமதுசெபவேண்டுதலுடன் கூடிய நல்விருப்புகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்” என்பதுவே பாப்பரசர் அனுப்பிவைத்த செய்தியாகும். இதற்குச் சேர்வின்ஸ்ரன்சேர்ச்சில் அனுப்பிவைத்தபதில் வருமாறு: “நமக்குத் தந்திச்செய்தியனுப்புவதிலே பரிசுத்தபிதாவாகிய தங்களுக்கிருக்கும் பற்றுதல்மிக்க சிந்தனையை நாம் வெகுவாகமதிக்கிறோம். யுத்தகாலத்திலே நமது உடன்பாடானசந்திப்பைச் சந்தோஷத்துடன் நினைவுகூர்ந்து, தங்கள்சுகத்துக்கும், வரப்போகும் அநேகவருடகால சுபீட்சத்துக்குமாக நமதுசுபவிருப்புகளைத் தங்களுக்கு அனுப்பிவைக்கிறோம்.”

### அடிமையின் குருபுதல்வர்

முன்னர் ஓர்அடிமையாய் இருந்தவரும், பின்தக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்துகொண்டவரும், தற்போது ஓர் மிஷனரியடக்றராய் இருந்துவருகிறவருமான டக்றர் அட்றியான் அற்றிமன் அவர்கள் றோயல்ஆபிரிக்கசபை வழங்கும் மிகவும்உயர்ந்த சன்மானமாகிய “வெல்கம் மெடல்” எனப்படும் மகிமைவிருது வழங்கப்பெற்றிருக்கின்றார். இதற்குமுன் இந்தமகிமைவிருதைப் பெற்றவர்கள், பெயர்பெற்றடக்றர் அல்பேட் சிவெயிற்சர் அவர்களும், பெல்ஜியநாட்டின் இரண்டாவது லெயோப்போல்ட் மன்னருமே. டக்றர் அட்றியான் ஓர் பாலியனாக இருந்தபோது, நரசோரஞ் செய்யப்பெற்று, அடிமைவியாபாரிகளுக்கு விற்கப்பட்டார். அப்போது ஓர் வெள்ளைக்குருவானவர் ஒரு சொற்பதொகைப்பணங் கொடுத்து அவரைமீட்டு விடுதலையாக்கிவிட்டார். இவர் அல்ஜியேர்ஸிலுள்ள வெள்ளைக்குருமாரின் கலாசாலையில் கல்வி பயின்றார். பின்த மோல்த்தா சர்வகலாசாலையில் வைத்திய சாஸ்திரம் படித்தார். 1889-ம் ஆண்டுமுதல் இவர் கங்கைக் காவிலே ஓர்வைத்தியமிஷனரியாகத் தொண்டாற்றிவருகின்றார். இவருடைய ஏகபுதல்வர் ஓர்வெள்ளைக்குருவரான வண. யோசெவ் அற்றிமன்சுவாமியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை மாதம்

பொதுக் கருத்து: இளைஞருக்கு ஞானப்பயிற்சி யளிக்கும் குருமார், துறவிகளுக்காக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: புத்த மதத்தினரிடையே வசிக்கும் கிறீஸ்துவர்களுக்காக வேண்டிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
சித்திரை மாதம் 21-ந் திகதி

# ஆசிய-ஆபிரிக்க மகாநாடு

இந்தோனேஷிய நாட்டைச் சேர்ந்த பாணடுங்நகரில் கூடியிருக்குங் காரணமாகப் பாண்டுங்மகாநாடென அறியப்படுவதாகிய ஆசிய–ஆபிரிக்க மகாநாடு சென்றதிங்கட்கிழமை கூடியுள்ளது. இதில் ஆசியாவையும், ஆபிரிக்காவையுஞ் சேர்ந்த 29 நாடுகள் கலந்திருககின்றன. இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கையாகிய ஐந்து கொழும்புநாடுகளின் அருமுயற்சியாலேயே இந்தமகாநாடு கூட்டப்படலாயிற்று. இந்த ஐந்துநாடுகளினதும் ஐக்கியமானது இன்று ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள 29 நாடுகளின் ஐக்கியமாகப் பரிணமித்திருக்கின்றது. இந்தியபிரதமர் பண்டித நேரு, சீனப்பிரதமர் சோ என் லாய், எகிப்தியபிரதமர் நாஸர், இலங்கைப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல, பாகிஸ்தான் பிரதமர் முகம்மத்அலி, பர்மாப்பிரதமர் ஊநூ, இந்தோனேஷிய பிரதமர் ஜோஜோ ஆதியவர்கள் இம்மகாநாட்டின் பிரதமபுருஷர்களாக விளங்குகின்றார்கள். இவ்வாறு உலக சரித்திரத்திலேயே இதுகாலவரை இல்லாதவிதமாய் அத்துணைபெரும் பிரஸ்தாபமாகக் கூடியிருக்கின்ற பாண்டுங் மகாநாட்டின் பிரதான அலுவல் என்ன? உலக சமாதானத்துக்கு வழிகோலுவதேயாகும். அத்துடன் அணுச்சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதுமாகும். ஆயினும் இந்த மகாநாட்டில் கூடியிருக்கும் நாடுகளின் பிரதானநோக்கம்யாது? அந்நியரிடமிருந்து பரிபூரண அரசியல், பொருளாதார விடுதலையடைந்து, ஒவ்வொருநாடும் தன்தன் பண்டைப்பெருமையை வளர்க்கும் சுயேச்சையுடன் பணியாற்றச்செய்வதேயாகும்.

மகாநாட்டின் ஆரம்பதினத்திலே நமதுஇலங்கைப்பிரதமர் சமாதானதிட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து நிகழ்த்திய அர்த்தபுஷ்டிநிறைந்த அரியசொற்பொழிவானது, வல்லரசுகளுக்கு மாத்திரமல்ல, எல்லா அரசுகளுக்குமே ஓர்புத்துணர்ச்சியையும், நல்லெழுச்சியையும் உண்டுபண்ணியிருக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம். —பெரியவல்லரசுகள் உலகநாடுகளையும், உலகமக்களையும் காப்பாற்றுவதற்குப்பதில் எல்லாவற்றையும், எல்லோரையுமே அழிக்கவல்ல சர்வநாச அணுக்குண்டுயுத்தத்தைத் தொடக்க முனைந்துநிற்கின்றன; அனர்த்தம் எந்தச்சமையத்திலுமே வரக்கூடும்; இந்தப் பேராபத்தைத் தடுக்க உலகில் மூன்றில் இருபகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பாண்டுங்நாடுகள் கங்கணங்கட்டி எழவேண்டும்; ஆயுதபலங்கொண்ட கம்யூனிஸ்த–கம்யூனிஸ்தல்லாத கோஷ்டிகளிடையே நாம்நின்று சமாதானத்தை உண்டுபண்ணும் ஆத்மசக்தி நம்மிடம் நிறையவிருக்கின்றது; ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தைத் திருத்தியமைக்கவேண்டும்; பெரியநாடுகளுடன் சிறியநாடுகளுக்கும், குடியேற்றநாட்டு ஆட்சியென்ற அடிமையாட்சியில சிக்கித்தவிக்கும்நாடுகளுக்கும் அதிலே இடங்கிடைக்கவேண்டும்; ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபையிலே ஐந்து நிரந்தர அங்கத்துவநாடுகளிடம் இருந்துவரும் 'வீற்றோ' அதிகாரத்தை நீக்கிவிடவேண்டு—மென்பனவாக அவர்பேசியிருப்பதெல்லாம் "சமாதானம் வேண்டுமானல், அதைநிலைபெறச்செய்ய வேண்டுமானல், எப்போதும் யுத்தத்துக்குத் தயாராயிருக்கவேண்டு"மென்ற கொள்கையை மேற்கொண்டு யுத்தசந்நதங்கொண்டு நிற்கும் வல்லரசுகளுக்கெல்லாம் ஓர் நல்ல புத்திகற்பிக்கவேண்டியதாகும்.

நமதுபிரதமர் கொழும்பிலிருந்து சென்றசனிக்கிழமையன்று ஆகாயவிமானத்திலே பாண்டுங்மகாநாட்டுக்குப் புறப்படும்போது கூறியஒருவிஷயம் பெரிதும் சிந்திக்கத்தக்கது. அதாவது, "பாண்டுங்மகாநாட்டில் ஆலோசனைக்கு வரவிருக்கின்ற 'பஞ்சசீல' அடிப்படைக் கொள்கையை நான் எதிர்க்கிறேன்; பொதுப்படையான யோக்கியதாம்ச பொதுவுணர்ச்சியைக் கொண்டிராத நாடுகளுக்குப் பஞ்சசீலத்தையும், உடனிருந்துவாழ்தலையும் போதிப்பதில் பயனென்ன? பஞ்சசீலம் போன்ற எந்த அடிப்படைக் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளுமுன் செஞ்சீனவின் உள்நோக்கம் நேர்மையான நல்நோக்கம்தானு என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றியே கண்டு கொள்ளவேண்டும்; சர்வதேச கம்யூனிஸம், கம்யூனிஸ்தபிரசாரம் ஆதியவைகளைக் கைவிட்டு விடுமென்று மகாநாட்டுக்குச் சீன உறுதிவாக்களிக்க வேண்டும்" என்பதே. நல்லது, செஞ்சீன அவ்வாறு உறுதிவாக்களிக்குமா? அளித்தவாக்கை நிறைவேற்றிவைக்குமா? அவ்வாறுயின் கம்யூனிஸமே அழிந்ததெனலாம். உலகசமாதானமே பிறந்ததெனவும் நிச்சயமாகநம்பலாம். அப்போது பாண்டுங் மகாநாடு செல்வாக்குள்ள ஓர்ஸ்தாபனமாகத் திகழ்ந்து ஆசிய–ஆபிரிக்க நாடுகளின் மறுமலர்ச்சிக்கும், உலகசமாதானத்துகும் வழிகோலிச் சரித்திரப் பிரசித்தியடையுமென்பதில் ஐயமில்லை.



## சதாசகாயமாதா கோணம்

"கிறீஸ்தவர்களுடைய சகாயம்"

கிறீஸ்தவர்களுடைய சகாயமென்றமட்டில் தேவதாயார் நமது சதாசகாயமாக விளங்குகிறார். திருச்சிலுவை அடியிலே அவ நமதுஞானத்தாயாக ஏற்படுத்தப்பட்டா. அன்றுதொட்டு எங்களஎல்லோரினதும் சகாயம அவதாண. அந்நேரம்தொடக்கம் உலகம் முடியுமட்டும் ஒவ்வொருகிறீஸ்தவனிலும் அவ தமதுதிருக்குமாரனைக் காணகிறு. நாமஒவ்வொருவரும் அவவுக்கு ஆண்ஞெரு கிறீஸ்தநாதராக இருக்கவேணடுமென்பதே அவவுடைய விருப்பம்.

யேசுக்கிறீஸ்துநாதர் எல்லோரையும் அவவுடையபாதுகாப்பில் ஒப்படைத்துள்ளார். தம்மை அவநேசித்ததுபோல எல்லோரையும் நேசிக்க வேணடுமெனச் சித்தமாயிருக்கிறார். தாய்க்குரிய அன்போடு அவ எங்கள் ஒவ்வொருவரையும் தமதுகண்காணிப் பின்கீழ் காத்துவருகிறு. அவவுடைய தாயன்பு நிறைந்துவழியும் மாசற்றஇருதயம் உலகம்முழுவதிலுமுள்ள சகலரையுமே தமதுசொந்தப்பிள்ளைகளாக மதிக்கச்செய்து, பாதுகாத்துவருவதினுல் அவஉணமையாகவே கிறீஸ்தவர்களின் சகாயமாக இருக்கிறு.

பரிசுத்தமாதாவாகிய கத்தோலிக்க திருச்சபை திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் ஏவுதலைக்கொண்டு, சர்வேசுரனுக்குப்பிறகு பரிசுத்தகன்னிமரியாய்க்குத் தன்ஆழ்ந்தகணணியத்தையும், சங்கைமரியாதையையும் கொடுக்க எப்போதும் முன்னணியில் நின்றுவருகிறது. பகிரங்கதீங்குகளிலோ, தனக்கெதிராக எழும்பும் ஆபத்தானகாலங்களிலோ மரியாயைச் சரணடைவதே திருச்சபையின் வழக்கமாக இருந்துவருவதைக் காணலாம். அவவுடைய அடைக்கலமாகியதுறையிற் சேர்ந்தோருக்கு ஒருவிதஇடுக்கணும் நேராதென்பது திருச்சபையின் திறம்பாதகொள்கையாகும். அவகிறீஸ்தவர்களின் சகாயமாயிருப்பதினுல் உலகத்தின் எங்கெந்தப்பாகங்களில் எங்கெந்தத்தப்பறைகள் பிறந்தனவோ அவற்றையெல்லாம் நிர்மூலமாக்கித் திருச்சபைக்கு வெற்றிஈட்டியமகிமை விசேஷமாக அவவுக்குரியதேயென்று எக்காலமும் ஒப்புக்கொள்ளுகின்றது, நமதுமாதாவாகியதிருச்சபை. எனவே, தங்கள்இகபரதேவைகளுக்கு மரியாயை நாடிச்செல்ல வேண்டுமென்றும், அவவுடையஅடைக்கலத்தைப் பெற வேண்டுமென்றும் மாதாவாகியதிருச்சபை தனதுமக்களை எப்போதுந் தூண்டிக்கொண்டே யிருக்கிறது.

மரியாயின் அத்தியந்த பரிசுத்ததனம், தேவனுடையதாயார் என்ற அதிஉந்நதகௌரவம், அவவுடைய மகிமைப்பிரதாபம், பரலோகத்திலும் பூலோகத்திலும் அவஅடைந்திருக்கும் வல்லமை, தமது அடைக்கலத்தைத் தேடுவோரமட்டில் அவ கொண்டிருக்கும் அணைகடந்தஅன்பு, இரக்கம்ஆதியாம் சீரியபண்புகள் அர்ச்சியசிஷ்டர்கள்எல்லோரும் தேவதாயார்மட்டில் பக்திநம்பிக்கை யுள்ளவர்களாயிருக்கத் தூண்டிவிட்டன.

ஆகவே, நாமும் கிறீஸ்தவர்களுடைய சகாயமாகிய சதாசகாய மாதாவிடம் போய் எங்கள் எல்லாத் தேவைகளிலும் ஒத்தாசையாயிருக்கும்படி அவவை மன்றுடுவோம். எங்கள் கவலைகளிலோ, இக்கட்டிடைஞ்சல்களிலோ நிர்ப்பாக்கியங்களிலோ, அதிஷ்டவீனங்களிலோ அவவுடையவல்லபமிக்க உதவிசகாயத்தைத் தேடுவோம்.

"மரியாயே, என்நல்லதாயாரே! கிறீஸ்தவாகளுடையசகாயமே! சதாசகாயமாதாவே! எங்கள்மன்றுட்டுகளைத் தயவாசக்கேட்டருளும் எங்கள் கவலைதுன்பங்களை நீக்கியருளும். எங்கள் சத்துராதியாகிய சாத்தானை வெற்றிகொள்ள வரந்தந்தருளும். எங்களோடு எப்போதும் இருந்தருளும். எப்போதும் எங்களுக்கு உதவிபுரிந்தருளும். ஓ! பரிசுத்த கன்னிகையே! இப்போதும், விசேஷமாக எங்கள் மரணநேரத்திலும் எங்களுக்காகவேண்டிக்கொள்ளும்."

---

## செபமாலைத்
## தேவ இரகசியங்கள்

பொன்போ லுதரந் திருச்சுதனர்
போந்து பிறப்பா ரெனத்தூதர்
புகன்ற மொழியும் மைத்துனியாம்
புனித இசவேல் மினவுதல்தான்

அன்போ டன்று கேட்டதுவும்
ஆவின் தொழுவில் ஆண்டவனை
அகிலந் துதிக்கப் பெற்றதுவும்
அவரைப் பிதாவுக் கர்ப்பணித்தே

என்போ டுருகு மன்பினுடன்
இன்கா ணிக்கை யீந்ததுவும்
ஈரா றுரும் ஆண்டதனில்
இவரைத் தேடிக் கண்டதுவும்

மன்பேர் களிகூர்ந் தருளிவரு
மாதா பாதம் வாழ்த்துவமே!
வாக்கு மனத்தாற் செபமாலை
மாதா பாதம் வாழ்த்துவமே.

●

துன்னுஞ் ஜெற்சே மனித்தோட்டஞ்
சுதனு ரவஸ்தை யுற்றதுவும்
தோன்றல் பிலாததின் தீர்வையதாற்
தூணிற் கட்டுப் பட்டதுவும்

மின்னுஞ் சிரசில் முண்முடியை
வீரூய் அழுத்தி யிழுத்ததுவும்
வெய்ய பாரச் சிலுவைதனை
மேனி நையச் சுமந்ததுவும்

இன்னுங் காணு தெனவெண்ணி
இருப்பா ணியினு லறையுண்டே
இனிய சீவ னீந்ததுவும்
எல்லாங் கண்ணிற் கண்டிதயம்

மன்னுந் துன்ப வாளீர்ந்த
மாதா பாதம் வாழ்த்துவமே!
வாக்கு மனத்தாற் செபமாலை
மாதா பாதம் வாழ்த்துவமே.

●

பாகா யுருகும் மனுக்குலத்தின்
பாவந் தீர்க்கப் பிறந்திறந்து
பார்க்க மூன்றில் உயிர்த்ததுவும்
பரலோ கத்திற் கெழுந்ததுவும்

ஆகா யத்தே செந்தீநா
அரிய ரூபத் துடனுவி
அப்போஸ் தலர்மீ திறங்கினதும்
அன்னை ஆரோ பணமதுவும்

மாகா யஞ்சேர் சுதன்யாவும்
வல்ல பிதாவும் மற்றோரும்
வானிற் பூவிற் கரசியென
மகுடஞ் சூட்டி வைத்ததுவும்

வாகாய்ப் பெற்ற ஆனந்த
மகிமைத் தாயை வாழ்த்துவமே!
வாக்கு மனத்தாற் செபமாலை
மாதா பாதம் வாழ்த்துவமே.

— ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாஸ்கா விருந்து

( K. S. Kulandai, *PES, CBE.* )

அசுவேருஸ் என்னும் அரசன் தனது ஆஸ்திபாஸ்தி, மகிமைப்பிரதாபத்தைக் காட்டுவதற்காக 180 நாள்வரைக்கும் ஆடம்பரமான ஓர் விருந்து அளித்தானென்று எஸ்தேர் ஆகமத்தில் (1:3,4) எழுதியிருக்கின்றது. ஆனால், இராசாக்களுக்கு அதிபதிஇராயராம் யேசுநாதர் தமது அளவிறந்த திரவியபொக்ஷங்களையும், மகிமை பெருமைகளையும் காண்பிக்க அதைவிடமேலான — மகத்தான விருந்தொன்று நமக்கு அருளச் சித்தமானார். அதாவது, தம்மைத்தாமே நமக்குப் போசனமாகத் தந்தருளிய அந்தத் தேவவிருந்தாகும். அசுவேருஸின் விருந்தைப்போல் 180 நாட்களுக்கு மட்டுமல்ல, இன்றும், என்றும், உலகமுடிவு பரியந்தம் நீடித்திருக்கப்போகிற தெய்வீக மோட்சவிருந்து இது.

அகண்ட வானமண்டலங்களெல்லாம் அவர்தங்குவதற்கு நெருக்கமான வாசஸ்தலமாய் இருக்கையிலே, தாம நமக்குள்தானே வசிக்கவேண்டுமென்றும், நமதுசரீரம் தமக்குத் தேவாலயமாக வேண்டுமென்றும் அவர் ஆசிப்பது எத்துணை வாக்குக்கெட்டாத சிநேகம்! தேவமாதா தமது உதரத்தில் பத்துமாதம் சுமந்திருந்த திவ்வியஇரட்சகர்தானே நமது இருதயத்தில் எழுந்தருளிவருகிறார்! தேவதாயார் அர்ச். எலிசபெத்தம்மாளின் வீட்டுள் பிரவேசித்தபோது, அந்தஅம்மாள் பிரமித்து, அதிசயத்துக் குரியவிதமாய்: "என் கர்த்தருடைய தாயார் என்வீட்டுக்குவருகிற பாக்கியம் எனக்குக் கிடைத்ததெப்படி?" (லூக். 1:43) என்று பேரொலியிட்டுச் சொல்லியிருக்க, அதே சர்வேசுரன் நமதுவீட்டிலல்ல, நமக்குள்தானே வருகிறதைக்கண்டு நாம் எத்துணை ஆச்சரியத்தில் அமிழ்ந்திநிற்கவேண்டும்! ஏனெனில், மெய்யானசர்வேசுரனும், மெய்யானமனிதனுமாகிய யேசுநாதர் மெய்யாகவே நமதுஉள்ளத்தில் எழுந்தருளிவருகிறார் அன்றோ!

மற்றும் தேவதிரவியஅனுமானங்களில் ஊற்றிலிருந்துஓடி வருகிற தண்ணீரைக்குடிப்பது போலாகும். ஆனால், திவ்விய நற்கருணையிலோ தேவஇஷ்டப் பிரசாதத்தின் ஊற்றையே முழுதும்குடிக்கிறோம். தம்மைத் தாமே நமக்குக்கொடுத்தருளினவர் வேறுஎன்னதான் கொடுக்காமற்போவார்? தாவீதரசன் ஜோனத்தாசின்மகனுகிய மிப்பிபோசெத் என்பவனைநோக்கி: "உன் தகப்பன்நிமித்தம் உனக்குத் தயவுபண்ணுவேன்; நீ என் பந்தியில் நித்தம்சாப்பிடுவாய்" என்று அழைத்தபோது, இரண்டுகாலும் முடமாயிருந்த மிப்பிபோசெத் மறுமொழியாக: "செத்துககிடக்கும் நாயைப் போலிருக்கிற என்னை நீர் ஏறெடுத்துப்பார்க்கிறதற்கு நான் யார்?" (2அரசர் 9:8) என்று சொல்லியிருக்கையில், சர்வேசுரன்தாமே தம்மோடுசாப்பிட வேண்டுமென்று ஈனமனிதனை அழைக்கும்போது அவன் சொல்லவேண்டியது: "தேவரீர் என்னை அவ்வளவு கனமபண்ணுவதற்கு நான்யார்? ஆண்டவரே, உம்மைஉட்கொள்ள நான் பாத்திரவானல்ல: தேவரீர் என்னைப் பாத்திரவானுக்கும் பொருட்டு உம்மை அண்டிவருகிறேன்" என்று சொல்லவேண்டியதன்றோ!

ஈற்றில், பசியோடுசாப்பிடுகிறபதார்த்தம் சரீரத்திற்கு நன்மையாய் இருக்கிறதுபோல், சர்வேசுரனோடு ஒன்றிக்க வேண்டுமென்கிற மகாஆவலோடும், அவரிடம் யாதொருவிசேஷ வரப்பிரசாதத்தை அடைய வேண்டுமென்கிற உருக்கமான ஆசையோடும் இந்த மோட்ச அப்பத்தைச் சாப்பிடும்போது அதனால் நமது ஆத்துமத்துக்கு ஆச்சரியமானநன்மை உண்டாகும். "பசித்துள்ளவர்களை ஆண்டவர் நன்மைகளினால் நிரப்பினார்" (லூக். 1:53) என்று அன்று தேவத்தாயார் வசனிக்கவில்லையா? யேசுநாதர் மனிதரோடு சஞ்சரிக்கும்போது அவருடையஉதவியை இரக்துமன்றாடின குஷ்டரோகிகள், ஆவேசமேறினவர்கள், திமிர்வாதக்காரர், குருடர், முடவர், ஊமைகள்எல்லோரும் வியாதியினின்று குணப்பட்டதைச் சுவிசேஷம் சொல்லவில்லையா? மேலும்யேசுநாதர்: "நானே சீவியஅப்பம்; இந்தஅப்பத்தை நல்லவிதமாய் உண்பவனிடத்தில் நான்சீவிக்கிறேன்" என்று பகரவில்லையா? ஆகவே, நாம் இனிமேல் வருடமொரு பாஸ்கா விருந்து உண்ணுமல் தாழ்ச்சி மனஸ்தாபத்தோடும், பக்திவிசுவாசத்தோடும், உருக்கமான ஆசையோடும் திவ்வியநற்கருணைப்பந்தியிலே இடைவிடாது அணுகினால் நமது ஆத்தும வியாதிகளுக்கெல்லாம் அதிலே தகுந்த ஒளடதம் அகப்படும் என்பது உறுதி. அதனை அடையத் தேவவரப்பிரசாத மாதாவின் உதவியை அண்டிப்போய் மன்றாடி:

"பக்தியாய்ச் சீவிய அப்பத்தை
உண்ணவும்
பாக்கிய வந்தனாய் இம்மையில்
வாழவும்
என்றும்ஓர் சாவான பாவம்செய்
யாமலும்
எம்மைச்சுத் தர்களாய்க் காருளம்
அம்மா"

எனப் பாடிவருவோம்.

# பாண்டுங் மகாநாடு

சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சியொன்று பாண்டுங்நகரிலே நிகழ்கின்றது. இந்தநூற்றாண்டிலேயே என்றுமில்லாதவாறு முக்கியமான ஆசிய – ஆபிரிக்க நாடுகளின்பிரதமர்கள் மகாநாடுஒன்றுகூடி உலகவிவகாரங்கள், ஆசிய–ஆபிரிக்க கண்டங்களுக்கு அவசியமான கருமங்கள்பற்றிய சம்பாஷணை நடத்துகிறார்கள் அதனால், இந்தமகாநாட்டின்மீது உலகின்கண்கள் தற்போது தீவிரபார்வைசெலுத்தி வருகின்றன.

இந்தோனேஷிய பிரதமரின்முயற்சியாலும், இந்தியபிரதமர், சீனப்பிரதமர் போன்றோரின் ஒத்துழைப்பாலும் கீழைத்தேயநாடுகள் ஒன்றுகூடும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இந்த வாய்ப்பை அளிக்குந்தலமாக விளங்கும் பாண்டுங்நகர் சரித்திரமுக்கியத்துவம் பெறுமென்பதில் ஐயமில்லை.

இந்தோனேஷிய தீவுகளின்சூழலில் இணைந்துள்ள ஜாவாவின் மேற்குப் பகுதியில்இருக்கிறது பாண்டுங். தேகாரோக்கியத்துக்கும் பொழுதுபோக்குக்குமாக உல்லாசப்பிரயாணிகள் உலகின் பலபாகங்களிலுமிருந்து இந்நகருக்குச் செல்வதுண்டு. இந்தோனேஷியாவிலேயே மிகச்சிறந்த சுகவாசஸ்தலமாக விளங்கும் பாண்டுங்நகரை ஜாவாவின் 'பரிஸ்' என்றும் அழைப்பார்கள். மேற்குஜாவாவின் தலைநகரமாகவிளங்கும் பாண்டுங்கிலே சுமார்பத்துலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். நகரம்வெகு சுத்தமாகவிளங்கும். வீதிகளின் இருமருங்கும் செழிப்பானமரங்கள் வரிசையாகக் காட்சியளிக்கும். பலநந்தாவனங்கள் இந்நகரை அணிசெய்கின்றன. அங்குவாழும் எவரைப்பார்த்தாலும் தூயஉடைதரித்து உல்லாசமாகக் காணப்படுவார்கள். யாருடனும் கரவில்லாமல் பழகுவார்கள். அது தொழில்வளம் பெருகாத நகரமாதலால், மற்றும்பல நகரங்களில் இயல்பாகக்காணப்படும் தொழிற்சாலைநெருக்கடிகள் அங்கில்லை. கல்விகலைக்கியானங்கள் இந்நகரத்திலே உந்நதநிலையில் இருக்கின்றன. பலதுறைகளிலும் உயர்தரக்கல்விபெறவிரும்புகிறவர்கள் பாண்டுங்நகருக்குப் போவார்கள்.

பலவகையிலும் சிறப்பியல்பு பொருந்தி விளங்கும் பாண்டுங்நகரின் சரித்திரத்தில் இப்போது ஒரு புதியஅத்தியாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆசிய – ஆபிரிக்கமகாநாடு பரிபூரணவெற்றிபெற இயற்கைஎழிலும், அமைதிச்சூழ்நிலையும்கொண்ட பாண்டுங்நகர் மகாநாட்டு ஸ்தலமாகத் தெரிந்தெடுக்கப்பட்டமை நன்றெனில் மிகையாகாது. கீழைத்தேயநாடுகள் ஒன்றுசேரத்தக்கதாய் நடைபெற்றுவரும் ஆசிய – ஆபிரிக்க மகாநாட்டின்மீது மேலைத்தேசங்கள் — முக்கியமாக அமெரிக்காவும், ஐக்கியநாடுகளின்சபையும் விசேஷகண்ணோட்டம் செலுத்திவருகின்றன. இவ்வாண்டுமாசிமாதம் அமெரிக்கவரசின் தலைமையில் 'சீற்றோ' மகாநாடு நடைபெற்றதைத் தொடர்ந்து, அதற்கு எட்டிக்குப்போட்டிபோல ஆசிய–ஆபிரிக்க மகாநாடு நடைபெறுவது மேற்குத்தேசங்களுக்குப் பெருந்தலைவலியை அளித்துள்ளது.

ஆசிய – ஆபிரிக்கமகாநாட்டில் பிரதானபங்குவகிக்கும் இந்தியபிரதமரும், மற்றும் அரசியற்தலைவர்களும் பாண்டுங்மகாநாடு மேற்குநாடுகளைப் பகைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் கூட்டப்படவில்லையென்று எவ்வளவுதான் உறுதிமொழி கூறியபோதிலும் அமெரிக்கா, ஐக்கியநாடுகள்சபை ஆகியவற்றின் அச்சம அகன்றபாடில்லை. மேறகுத் தேசங்களின்பயம் அதிகரிப்பதற்கு ஓர் முக்கியகாரணம் ஆசிய–ஆபிரிக்கமகாநாட்டில் செஞ்சீனு பிரதானமாகக் கலந்துகொள்வதுதான. அதில் எங்கே செஞ்சீனு தனதுசெல்வாக்கைப் பிரயோகித்துவிடுமோஎன்று அமெரிக்கவாசு திகில்கொள்ளுகிறது. இவ்வாறு அது அஞ்சவேண்டியது ஏன்? ஏனெனில், பாண்டுங்மகாநாடானது செஞ்சீனடபிரதமர் ஏனைய ஆசிய – ஆபிரிக்க நாடுகளின பிரதமர்களுடனெல்லாம நேரடியானதொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பளித்திருக்கிறது. இந்தத்தொடர்புகாரணமாகச் செஞ்சீனவுடன் கீழைத்தேய நாடுகளின்உறவு பலப்படச் சந்தர்ப்பம்கிடைத்திருக்கிறது. செஞ்சீனவுடன் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் ஜப்பானியஅதிகாரிகளும் சீனப்பிரதமருடன் உறவாடச் சந்தர்ப்பமிருக்கிறது. ஆனால், இந்தியா, இந்தோனேஷியாபோன்றநாடுகளின்பிரதமர்கள் இம்மகாநாடு மேற்குநாடுகளுக்கு விரோதமானவையல்ல என்பதைத் தெளிவாகஎடுத்துவிளக்கி யிருக்கிறார்கள். இன்னும் அமெரிக்காவின் நலனிலே அக்கறைகொண்ட துருக்கி, ஈறுக், பாகிஸ்தான், லெபனன், பிலிப்பைன்ஸ், தாய்லாந்துபோன்ற நாடுகளும பாண்டுங்மகாநாட்டில் கலந்துகொள்வதால், அமெரிக்கவாசுக்குப் பாதகமாக மகாநாட்டில் எதுவும் நிகழ்ந்துவிடாமல் இந்நாடுகள் பார்த்துக்கொள்ளும்.

பாண்டுங்மகாநாடு உலகச்சூழ்நிலையிலும்; ஆசிய – ஆபிரிக்க கருமங்களிலும் என்னபலாபலன்களை உண்டுபண்ணுமென ஆராய்வதற்கு இது உகந்த தருணமல்ல. ஆயினும், பரஸ்பரம் ஒன்றுகூடிவாழும்கொள்கை பலப்படவும், உலகசமாதான சூழ்நிலை அபிவிருத்திபெறவும், கீழைத்தேயங்கள் தங்கள்பிரச்சினைகளைத் தங்களுக்குள்ளே ஒற்றுமையாகத் தீர்த்துக்கொள்ளவும் பாண்டுங்மகாநாடு உறுதுணையாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

புத்தக மதிப்புரை

## கத்தோலிக்கவாசகம்

### பாலர் கீழ்ப்பிரிவு

—※—

பாலர் கீழ்ப்பிரிவுக்கென்று நமது அச்சியந்திர சாலையிலிருந்து நவமாக வெளிவந்திருக்கும் பாடபுத்தகம்ஒன்று தரப்பெற்றோம். பாலர் கீழ்ப்பிரிவில் படிக்கும் பிள்ளைகளின் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவரத்தகும் மாதிரியாய், இருவர்ணங் கலந்த அழகான பெரிய எழுத்துகளிலே இக்கால நவீனமுறையைத் தழுவி இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கக் காண்பது சந்தோஷம். [illegible] பிள்ளைகள் அறியவேண்டிய முதல் எழுத்துகள் சிவப்பு வர்ணத்திலும், மறுஎழுத்துகள் கறுப்பு வர்ணத்திலும் அச்சிடப் பெற்றிருப்பதாலே அவர்கள் முதல் எழுத்துகளை முதலிலே இலகுவில் கண்டறிந்து கற்றுக்கொள்ளவும், பிறகு மறுஎழுத்துக்களைப் படிப்படியாக அறிந்து படித்துக்கொள்ளவும் இதுமிக வாய்ப்பாகின்றது. படிக்கும் ஒவ்வோர் சொல்லுக்கும் தகுதியான படம் அமைந்திருக்கிறது. சிறுபிள்ளைகள் இலகுவில் விளங்கியும், விரும்பியும் படிக்கக்கூடியனவாய்க் கருத்துகள் பொதிந்த பொருத்தமான சிறியவாக்கியங்களும், உற்சாகமூட்டும் சின்னச் சின்னப் பக்திரசம் நிறைந்த பாக்களும் அவர்களுக்கே கல்வியில்பெரிதும் தென்பு அளிப்பனவாகும். அதனால் இப்புத்தகம் ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் மிகவும் பயன்படும் என்பதே நமது திறம்பாத நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

உங்கள் விடுமுறை காலத்தை உல்லாசமாய்க் கழிக்கிறீர்கள் என்று எண்ணிச் சந்தோஷம் அடைகிறேன். தேகாப்பியாசத்துக் கேற்ற பலவித விளையாட்டுகளிலும், அறிவுக்கும், நல்லொழுக்கத்துக்கு மேற்ற நல்ல புத்தகங்களை வாசிப்பதிலும் உங்கள் நேரத்தை உபயோகமாய்ச் செலவழியுங்கள்.

புத்தகங்களில் பல உண்டு. அலங்காரமான அட்டைப் படங்களும், பல்வேறு சித்திரங்களும் நிறைந்த புத்தகங்களும், பத்திரிகைகளும் உண்டு. இவைகளில் உங்களுக் கேற்றவை எவையென்று அறிந்து அவைகளை வாசியுங்கள்.

எழுதுகிறவர்கள் எதையும் எழுதலாம். நாம் அவைகளை வாசிக்க வேண்டும் என்ற நியதி யில்லை. பழங்களில் பல உண்டு. ஆனால், எல்லாம் உணவுக்கு உதவுமா? மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் போன்றவைகள் நமக்கு உணவாகும். காஞ்சுரம் பழம் நமக்கு நஞ்சாகும். அப்படியே சில பத்திரிகை, புத்தகங்களும் எம் மனதிற்கு நல்லுணவாகும். ஒழுக்கத்தையும் மேம்படுத்தும். வேறுசில ஒன்றுக்கும் உதவா.

இப்படி உதவாதவைகளைக் கழித்து விடுவது மாத்திரமல்ல, அவைகளைக் கண்டிக்கவும் எமக்கு உரிமை உண்டு. எமது விருப்பு வெறுப்புகளைப் புத்தகாசிரியருக்கும், பிரசுர கர்த்தாக்களுக்கும் வெளிப்படுத்துவதினால் எவ்வித புத்தகங்கள், பத்திரிகைகளை வெளியிடவேண்டும், எவைகளுக்கு ஆதரவு கிடைக்கும் என்று அறிந்து, நல்லொழுக்கத்துக் கேற்ற புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பிரசுரிப்பார்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## திருப்பலி

### காணிக்கை

நீங்கள் ஞானஸ்நானம்பெற்ற பொழுது கிறீஸ்துநாதருடன் ஒன்ருகினீர்கள். தாய்மரத்துடன் தொடர்புள்ள கிளைகளைப்போலவும், தலையினுல் இயக்கப்படும் சரீரத்தின் ஒருபாகம், அல்லது உறுப்புப்போலவும் ஆனீர்கள்.

எங்கள் ஆண்டவர் ஒருகுரு. ஞானஸ்நானம் பெற்றதிலிருந்தே அவருடைய குருத்துவத்தில் நீங்களும் பங்கடைந்தீர்கள். உறுதிப்பூசுதல்பெற்ற பொழுது அப்பங்கு மேலும் உறுதி பெற்றது.

இதை ஏன் சொல்லுகிறேன் என்று கேட்பீர்களாக்கும். ஏனெனில், இந்த எண்ணம் பூசைகாண உதவும். ஆண்டவரின் குருத்துவத்தில் உங்களுக்கும் பங்குஉண்டு என்று அறிந்திருப்பது, பூசைசெய்யும் குருவானவருடன் அதிகம் ஐக்கியப்பட்டுப் பூசையை ஒப்புக்கொடுக்க உங்களுக்கு உதவியாயிருக்கும்.

பூசையில் காணிக்கைப் பகுதியைக் கவனியுங்கள். குருவானவர் பூசைப் பாத்திரத்தை மூடியிருக்கும் பட்டை எடுத்துவிடுகிருர். பூசை அப்பத்தைச் சர்வேசுரனுக்குக் காணிக்கை யாக்குகிருர். அது கோதுமையினுல் செய்த மெல்லிய அப்பம். பாத்திரத்தில் முந்திரிகை இரசம்வார்த்து, இரண்டு மூன்று சொட்டுத் தண்ணீரும் விடுகிருர். பின்பு முந்திரிகை இரசத்தைச் சர்வேசுரனுக்குக் காணிக்கை வைக்கிருர்.

இப்பொருட்களைச் சர்வேசுரனுக்குக் காணிக்கை வைப்பதில் குருவானவருடன் நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுடைய சிறு காணிக்கைகளையும் கூடச்சேருங்கள். சர்வேசுரன் அறிவிக்கிறவைகளை யெல்லாம் விசுவசிப்பதற்கு உங்களுடைய புத்தியை ஆண்டவருக்குக் கொடுப்பதாகச் சொல்லுங்கள். உங்கள் ஞாபகத்தைக் கொடுத்து அவரை நினைப்பீர்களென்று கூறுங்கள். உங்கள் சுயாதீனத்தைக் (சித்தம்) கொடுத்து அவரை நேசித்து அவருக்கு அமைவோமென்றும், அவருக்குத் தொண்டுசெய்ய உங்கள் சரீரத்தைக் கொடுப்போமென்றும் வாக்குப் பண்ணுங்கள்.

சர்வேசுரனுடைய குடும்பத்தைப் பற்றி நாம் முன்கூறியது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? நாமெல்லோரும் அக்குடும்பத்துக்குச் சேர்ந்தவர்கள். காணிக்கை வேளையில் பாவிக்கும் அப்பமும், இரசமும் நமக்கு இதை நினைவூட்டுகின்றன.

அப்பத்திற்குக் கோதுமை வேண்டும். பல கோதுமை மணிகளை அரைத்தே அப்பஞ் செய்யப்பட்டது. எல்லாமணிகளும் [illegible] நமக்கு அப்பம் [illegible]

இரசம் முந்திரிகைப் பழங்களால் ஆகும். பல பழங்களைப் பிழிந்து இரசம் ஆக்கப்படும். எல்லாப்பழங்களும் சேர்ந்தால்தான் இரசங் கிடைக்கும்.

அப்படியே நாம் ஒருபெரிய குடும்பம். சர்வேசுரன் எமது தந்தை. பல உறுப்புகள் கொண்ட ஒருசரீரம் என்றும் எம்மைச் சொல்லலாம். இச்சரீரத்தின் தலையாகிய யேசுவில் நாமெல்லோரும் ஒன்ருகிறோம்.

நாம் ஒற்றுமையா யிருக்க வேண்டும். ஒருவ ரொருவரை நேசிக்க வேண்டும். உதவி, ஒத்தாசை புரிய வேண்டும். நமது அயலான் நம்முடன் ஒரேசரீரத்துக்குச் சேர்ந்தவனுகையால் நாம் அவனுக்கு வருத்தமுண்டாக்க லாகாது

---

## நிரீச்சுரவாதியின் கடிதம்

நிரீச்சுரவாதி ஒருவர் கிராமப்புறப் பத்திரிகாசிரியர் ஒருவருக்கு மேல்வருமாறு எழுதினுர்.

இத்துடன் வருவதைப் பிரசுரிக்க உமக்குத் தைரியம் இருந்தால் பிரசுரிக்கவும். "யான் ஒருபரிசோதனை நிகழ்த்தினேன். என்னிடம் பத்து ஏக்கர் நிலமுண்டு. அதை ஒரு ஞாயிற்றுக் கிழமை உழுதேன். ஞாயிற்றுக் கிழமையில் விதைத்தேன். அதற்குவேண்டிய நீர் பாய்ச்சியதும், களைபிடுங்கியதும் ஞாயிற்றுக்கிழமையில்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமையிலேயே அறுவடைசெய்து, சூடுமிதித்து, வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தேன். இந்தப்போக வேளாண்மை செய்தவர்களிலும் பார்க்க, எனக்கு ஏக்கருக்கு அதிகப்படியான இலாபம் கண்டிருக்கிறது."

இந்தக் கடிதம் பிரசுரிக்கப்பட்டது. அதன்கீழ்பத்திரிகாசிரியர் குறிப்புஎழுதியிருந்தார்: "சர்வேசுரன் ஒருபோக வேளாண்மையுடன் தமது கணக்கு வழக்குகளை முடித்து விடுவதில்லை."

* * *

லொஸ் ஆஞ்செல்ஸ் பட்டணத்தில் பூகம்பம் உண்டானபொழுது பலசனங்கள் வீதிகளில் நடமாடிக்கொண்டிருந்தனர். கட்டடங்களி லிருந்து செங்கற்களும், சன்னல்களி லிருந்து கண்ணுடித் துண்டுகளும் விழுந்தபொழுது சனங்கள் பயந்து ஒதுங்கினர். ஒரு கிழவிமாத்திரம் கலக்கமின்றி யிருந்தாள். "பயமில்லையா? அம்மா" என்று அருகில் நின்றவர் கேட்டபொழுது, "ஏன் பயப்படவேண்டும்? இவ்வுலகத்தை ஆட்டியசைக்க வல்லகடவுள் ஒருவர் இருக்கிருரென்று அறிந்து நான் சந்தோஷப் படுகிறேன்" என்ருள்.

---

## ஆய்ந்தாய்ந்து கொள்ளாத நட்பு

'ஜெயம்'

தவளை யொன்று வாவியில்
  தனிமை யாக வாழ்ந்தது
கரையில் வந்த எலிதனைக்
  கண்டு நட்புக் கொண்டது

●

பிரிய நண்பர் இருவரும்
  பிரிந் திடாது வாழவே
சிறிய சோடிக் கால்களைச் [னர்
  சேர்த்துக் கட்டிக் கொண்ட

●

பச்சைக் குளத்தின் அழகினைப்
  பால்ய நண்பன் காணுமோர்
இச்சை கொண்டு தவளையும்
  இறங்கி நீருள் பாய்ந்தது

●

எலியும் குளத்தில் வீழ்ந்தது
  இமைக்கும் பொழுதில் மாண்
                டது
அலையும் நீரின் அலையிலே
  ஆடி யாடி வந்தது

●

மிதக்கும் எலியை வானிலே
  மிதந்த பருந்து கண்டது[டது
கணத்திற் கொத்திக் கொண்
  களிப்பி னேடு சென்றது.

●

தவளை எலியின் காலுடன்
  தானுஞ் சேர்ந் திருந்ததால்
அவல மாகச் செத்தது
ஆய்ந்து நட்புக் கொள்ளுவாய்!

---

## முத்தின் மகிமை

கோவிலுக்கு எதிர்ப்புறமாக ஒரு வீடு. பெரிய முத்தைஇழந்த ஓர்வியாபாரியைப்போல் அவ்வீட்டில் வசித்த ஒருதாயும், சுமார் பத்து வயதுள்ள அவள் மகனும் அங்கலாய்த்து நிற்கின்றனர். தாய் தன் கணவரைக் காணுமலும், மகன் தன்தந்தையைக் காணுமலும் வழியே வழிபார்த்துத் தவிக்கின்றனர். குடும்பம் ஓர்கத்தோலிக்க குடும்பந்தான். ஆயினும் தகப்பன் ஓர் நல்ல கத்தோலிக்கன் அல்ல. நெடுநேரம் பொறுத்திருந்த மகன் அலெக்சாண்டர் தன் அருமைத் தாயை நோக்கி: "அம்மா, அப்பா எங்கே?" என்று கவலையுடன்கூடியகுரலில் கேட்டான். "வெளியே போயிருக்கிருர் கண்ணே, வியாபாரம் முடிந்தவுடன் திரும்பி விடுவார்" என்று தாய் பதில் அளித்தாள்.

மணி ஏழு அடித்தது. தாய் மகனுக்கு உணவு கொடுத்துப் படுக்கைக்கு அனுப்பிவிட்டுத் தன்கணவனின் வரவைக் காத்திருந்தாள். மணி ஒன்பது ஆகியும் [illegible] அவளும் அயர்ந்து விட்டாள்.

நடுச்சாமவேளை யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. தாய் உடனே எழுந்துபோய்க் கதவைத் திறந்து தன்கணவர் வந்திருப்பதாகக் கண்டு களிப்புற்ருள். அப்போது மகனும் விழித்துக் கொண்டு: அப்பா, அப்பா, என்று அழைத்துக் கொண்டே ஓடிச் சென்று என்ன வாங்கிவந்தீங்கள் எனக்கு என்று ஆவலுடன் கேட்டு ஆராய்ந்து பார்த்ததும் ஏமாற்றம் அடைந்தான்.

அப்போது தகப்பன் கூறுவார்: "மகனே! நமக்கு இன்று ஓர் அதிர்ஷ்டம் பிறக்க இருக்கிறது; அதாவது, எனக்குத் தெரிந்த ஒருவரிடம் ஓர்விலை உயர்ந்த முத்து இருக்கிறது; நம்மிடமுள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கவேண்டும்; பிறகு அதைப்போலப் பன்மடங்கு விலைக்கு அதை விற்றுப் பெரிய செல்வர்கள் ஆகலாம்" என்ருர்.

மகன் சிறிதுநேரம் எதனையோ யோசித்தான். பின்னர் எதையோ கண்டுபிடித்தவன் போலத் தந்தையை நோக்கி: "அப்பா! நீங்கள் இந்த ஓர் முத்தை — அழிந்துபோகக் கூடிய ஓர் முத்தை வாங்க ஆசைப் படுகிறீர்கள்; ஆனுல், அழியாத முத்தான — முத்துக்கு முத்தான மோட்ச முத்தை — மோட்ச பாக்கியத்தை அடைய என்னசெய்து வருகிறீர்கள்?" என்ருன். அவன் முந்தியநாள் ஞான உபதேசவேளை படித்த புதிய முததின் உவமையை ஞாபகத்தில் கொண்டே இவ்வினவைப் போட்டான். இதைக் கேட்டதே தந்தை ஓர்கால் திகைத்தார். மகனின் முத்தான வார்த்தைகள் அவர் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன. தான் எண்ணிவந்த காரியத்தை மறந்தார். அன்றுமுதல் அவர் மனம் மாறத்தொடங்கியது. கடைசியாக மனந்திரும்பி நல்ல கத்தோலிக்கனுகச் சீவிக்கத் தொடங்கினுர். இப்போது அந்தக் குடும்பம் சீர்பெற்று ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பமாகத் திகழ்கின்றது, பத்துவயதுப் பாலியனின் முத்தான வார்த்தைகளால்.

மேரி டோறின்,
ரோ. க. பாடசாலை, மூன்னக்கரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா தடுக்காதீர்கள்!

"செலீன்! இதுதான் உன்கடைசித் தீர்மானமா?"

"ஆம் அப்பா, அசைக்கமுடியாத என்தீர்மானம் இதுவே."

"செலீன்! கடைசிமுறையாக இன்னும் ஒருநாள் அவகாசம் கொடுக்கிறேன், நீர்க்கயோசித்துப் பதில்சொல்ல."

"இல்லையப்பா வேண்டாம். நன்ருய் எல்லாம் நான் யோசித்தாய் விட்டது. கன்னியர்மடமே என்ஆசை, கலியாணத்தில் எனக்குக் கடுகத்தனையும் விருப்பமில்லை."

"குழந்தாய்! இன்னும் சிறியவள் நீ, உலக அனுபவமின்றிப் பேசுகிருய். நன்ருக யோசி" என்று கயமாகச் சொன்னுர் செலீனின் தந்தை ஜெயசீலன்.

"ஆனல், அவளா ஏமாறுகிறவள்? "தேவஅழைத்தலைத் தடுப்பது பெரிய பாவமாயிற்றே அப்பா! தவிர, எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பாக்கியமா அது?"

ஜெயசீலனின் முகம் மாறியது. குரல் கடுத்தது. "போதும் நிறுத்து அதிகப்பிரசங்கி! நீ நாலுவயதுக் கிழவியோ எனக்குச் சொல்லித்தர! மடத்தில் நீசேருவதை இருந்துதான் நான் பார்க்கப்போகிறேன்" என்று கர்ச்சித்துவிட்டு வெளியே சென்ருர் ஜெயசீலன்.

ஜெயசீலன் ஒருபெரிய வியாபாரி, மிகவும் கண்டிப்பானவர். எனினும், தர்மசிந்தனையுள்ளவர். ஆனல், ஒன்று. தான் பிடித்தமுயலுக்குக் காலமூன்றே என்று சாதிக்கும் குணமுடையவர். அவருக்கு "ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு" என்று செலீன் அருமைப்புதல்வியாக வாய்த்தாள்.

செலீன் எட்டாம்வகுப்புவரை தன் வீட்டருகில் இருந்த பாடசாலையில் படித்தபின் மேற்படிப்புக்காக சற்றே தூரத்திலிருந்த கன்னியர் மடத்தை அடைந்தாள். அன்றே அவள்வாழ்க்கையில் ஒருமாறுதல் உதித்தது. தனக்கு கல்விகற்பிக்கும் கன்னியர்களின் அன்பும், தயாளமும், அவர்களின் தியாகவாழ்வும் அவளை வெகுவாகக் கவர்ந்தன. நகைகளையும், பட்டாடைகளையும் மூலையில் விட்டெறிந்தாள் செலீன். இந்த திடீர்மாறுதலே அவள் பெற்ருேர் கவனியாமலில்லை. எல்லாம் 'வாலிபத்தின் கோலம், பிறகு தானகப் பழைய நிலைமைக்கு வந்து விடுவாள்' என்று சும்மா இருந்து விட்டனர்.

"நான் கன்னியாஸ்திரியாக விரும்புகிறேன், கடவுள் சித்தம் எப்படியோ? என்று சிலசமயம் யோசிப்பாள் செலீன், தன் சீவிய அந்தஸ்தைத் தனக்குத் தெரிவிக்கும்படி கடவுளிடம் தினமும் வேண்டினுள். படிப்பும் முடிந்தது. அவளின் சீவிய அந்தஸ்தும் இன்னதென்று தெளிவாக விளங்கி விட்டது. தனக்குத் தேவஅழைத்தல் இருப்பதை நினைக்கும் போதெல்லாம் அவளுக்கு ஒரே குதூகலம்.

ஒருநாள் ஜெயசீலன் தன் மகளை அழைத்து, அவளுக்கு ஒரு நல்லவனைப் பார்த்திருப்பதாகவும், விமரிசையாக அவள் விவாகத்தை நடத்த உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார். செலீனே தான் கன்னியாஸ்திரியாகப் போவதாகவும், விவாகத்தில் தனக்கு விருப்பமேயில்லையென்றும் பணிவுடன் தெரிவித்தாள். ஏமாற்றமடைந்த தகப்பனுக்கும், மகளுக்கும் வாக்குவாதம் நடந்தது. அச்சம்பவமே ஆரம்பத்தில் கூறப்பட்டிருப்பது.

தனியே விடப்பட்ட செலீன் விம்மினள். அழுதாள். அவள் மனதிலே ஒருபெரும் போராட்டம். "நான்கட்டிய மனக்கோட்டையெல்லாம் தகர்ந்தெறியப்படுவதா? இவ்வளவு நாளும் செய்த செபமெல்லாம் வீண்தானு? ஆமாம், கலியாணம் செய்துகொண்டால்தான் என்ன? கண்ணிறைந்த கணவர், கைநிறையப்பணம், உல்லாசவாழ்வு என்ற கனவு உதித்தது அவளுக்கு. ஆனல், மறுகணமே அக்கனவைத் தன்காலடியிலிட்டு மிதித்துவிட்டாள். கலியாணஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. அறையிலேயே அடைந்துபோய் அடைபட்டுக் கிடந்த செலீனின் உடல்மெலிந்து, சோபையிழந்து காணப்பட்டாலும் அவள் மனம் தளரவில்லை.

ஒருநாள் தன்மனத்துயரை மறக்கத் தையல்வேலை செய்துகொண்டிருந்தாள். இல்லை, கைகள்தான யந்திரம்போல் வேலைசெய்துகொண்டிருந்தனவே ஒழிய, அவள் மனம் தனது எதிர்கால யோசனையில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. திடீரெனக் 'ஹா' என்று கத்தினுள் செலீன். அவள் கையில் ஊசி தைத்துவிட்டது. இரத்தம் 'குபு குபு' வென்று வந்தது. அதனுல் சுரங்கண்டது. அந்தச்சுரம் விரைவில் சன்னியாக மாறிவிட்டது. "நான் கன்னியாஸ்திரியாகப் போகிறேன், ஐயோ அப்பா தடுக்காதீர்கள்; என்னை அடிக்காதீர்கள்" என்று ஏதேதோ பிதற்றினுள். அவள் பெற்ருேர் தவித்தனர். ஜெயசீலனின் கல்மனமும் பாகாய் உருகிற்று.

செலீனுக்குச் சாத்தைவிட மனுேவியாதியே அதிகம் என்று கண்டு, அவளை யாரும்தொந்தரவுசெய்யக்கூடாது; அவள்சொல்லுகிறபடி செய்தால்தான் சுகம்உண்டு; உயிர் உண்டென்று டக்டர் கூறினர். தனது அருமைமகளுக்காக எதவுஞ்செய்யத்தயாராயிருந்தார் ஜெயசீலன். சில தினங்களின்பின் அறிவற்றுக் கிடந்த செலீன் மெதுவாகக் கண்களைத்திறந்தாள். "எப்பொழுது நான் மடத்திற்குப்போவேன்?" என்று கூரையைப் பார்த்தவண்ணம் கேட்டாள். "நாளைக்கே போகலாம் அம்மா" என்று அவள்தந்தை கனிவுடன் கூறினர். அழகிய தன்கண்களை அகலவிரித்த செலீன் நாளைக்கா என்று வியப்புடன் தன்அப்பாவைப் பார்த்தாள். "ஆமாம் கண்ணே, சுகமானதும் நீ மடத்துக்குப் போகலாம்; இப்போது கொஞ்சம் தூங்கு" என்ருள் அவள்தாய், செலீனின் தலையைக் கோதியவாறே. மூன்றுவாரங்கள் கழிவதற்குள் பூரணசுகம் பெற்றுவிட்டாள் செலீன். அருமைத்தோழிகள் வியந்து நிற்க, பந்துக்கள் புடைசூழ, அருகே பெற்ருேர் ஆனந்தக்கண்ணீர் சிந்த, கன்னியர்ஆசிரமமாம், ஒப்பற்ற தன்தியாக வாழ்க்கையை — துறவாழ்க்கையைத் தொடங்கினுள் செலீன்.

R. V.

---



### அது என்ன ?

1. எல்லாவற்றையும் கேட்கும் ஆற்றல் அதற்குண்டு. ஆனல், ஒருவருக்கும் ஒன்றுமே சொல்லாது.
2. ஒட்டகத்துக்கும் வெறியனுக்கும் முள்ள வித்தியாசம் என்ன?
3. யாரென்ருலும் அதைத் தம் கண்ணுக்கு முன்பாகக் காணவில்லை.
4. எவருக்கும் கொடுக்கும்சக்தி அதற்குண்டு. ஆனல், ஒருவரும் அதைக் கொண்டுபோக மாட்டார்கள்.
5. குதிரைநடக்கிறது, கங்காரு பாய்கிறது எதற்காக?

விடை :

1. காது.
2. ஒட்டகம் ஒருகிழமைக்குக் குடியாமல் வேலைசெய்யும். வெறியனே, ஒருகிழமைக்கு வேலை செய்யாமல் குடிப்பான்.
3. சொந்த மூக்கு.
4. செவி.
5. இடம் பெற.

---

## உதிர்ந்த மலர்கள்

அர்ச். பிரான்சிஸ் சலேசியார் பெரும்பாவியாயிருந்த ஓர்ஸ்திரீயிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டபின், அவள் அவரைநோக்கி: 'சுவாமி, எனதுக்கிரமங்களையெல்லாம் கேட்டுவிட்டு, என்னைப்பற்றி என்னநினைக்கிறீர்கள்" என்ருள். உடனே அர்ச்சியசிட்டர் அவளைப்பார்த்து: "மகளே, நீ இப்போது ஒருஅர்ச்சியசிட்டவள் என்றுதான் நினைக்கிறேன்; சனங்கள் என்ன சொன்னுலும்சரி; அவர்களுடைய தீர்மானமும் மரியமதலேனம்மாள் மனந்திரும்பியபின் அவள்பேரில் பரிசேயர் செய்த தீர்மானத்தைப்போல் இருக்கும்; ஆனல், யேசுநாதர் அவளைப் பற்றி என்ன நினைத்தாரென்று உனக்குத்தெரியுந்தானே; உன் சீவியகாலத்தில் நீ இதுவரைசெய்த பாவங்களெல்லாம் இப்போது போய்விட்டன; உனது ஆத்துமம் பாவமரணத்திலிருந்து தேவஇஷ்டப்பிரசாத சீவியத்துக்கு அழைக்கப்பட்டதே என்றுநினைத்து ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்திருக்கிறேன்" என்ருர்.

* * *

தனதுமகள் கன்னியாஸ்திரியாய்ப் போனதையிட்டுக் கஸ்திபட்ட ஓர் சிநேகிதனுக்கு ஆராய் வெய்யோ என்னும் பெயர்பெற்ற பிரான்சிய கவிமான் எழுதியதாவது: "எனது அருமை சுனபரே, அழாதேயும். எனக்கு ஐந்துபெண்குழந்தைகள் உண்டு. இந்த ஐவரும் கன்னியாஸ்திரிமார் ஆகிவிட்ட போதிலும் நான் முறையிடமாட்டேன். ஆயினுமஇவர்களுள் ஒவ்வொருவரையும் நான் எவ்வளவுஅன்போடு சிநேகிக்கிறேனென்பது ஆண்டவருக்குத்தான் தெரியும், கனியானது மரத்துக்கு எவ்வளவுசொந்தமோ அவ்வளவுதான் நமதுபிள்ளைகள் நமக்குச்சொந்தம். கனிபழுத்தவுடன் தரையில் விழுந்துவிடுகிறது. தேவதிருக்கரங்களில் விழுகிறவர்கள் பாக்கியவான்கள். மாசற்ற செம்மறிப்புருவையாகிய மதுரயேசுவைப்பின்செல்லுகிற கன்னிகையே பாக்கியவதி. கன்னியாஸ்திரியாயிருக்கும் பிள்ளையைப்பெற்ற தந்தையே பாக்கியவான்."

* * *

அர்ச். பத்தாம் பத்திநாத பாப்பானவர் கத்தோலிக்கப்பத்திரிகையின் அத்தியாவசியகத்தை நன்குணர்ந்தவராய், அதற்காகப் பெரிதும் உழைத்துவந்தார். அவர் வெனிஸ்நகரின் கருதினலாய் அதிமேற்றிராணியாராய் இருந்தபொழுது, யேசுநாதரின் இராச்சியத்தைப் பரவச்செய்வதற்குக் கத்தோலிக்கபத்திரிகை இன்றியமையாததெனக் கண்டு, தடைதாமதமின்றி ஒரு பத்திரிகைக் காரியாலயத்தை அமைத்தார், இன்றவரை அந்நகரக்கட்டத்தின் முன்பாக ஓர் பித்தளைத்தகடு தொங்குகிறது. அதில் "பத்தாம்பத்திநாதரின் மகாப்பெரியவேலை" என்று வரையப் பட்டுள்ளது. அவர்தான் அதைத் திட்டஞ்செய்தார். பெரிய பாப்புமார்களில் ஒருவராய் விளங்கும் இச்சற்குணசீலர் அத்தனைசிரத்தையுடன் கத்தோலிக்க பத்திரிகைக்காக உழைத்தாரென்றால், இல்லறநிலையில் இருக்கிற நாம் கத்தோலிக்க பத்திரிகைகளை வாங்கிவாசித்தும், அவற்றைப் பிறருக்குக் கொடுத்தும் நன்மை புரியக் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா? ஒவோவார்த்தையில் சொல்லவேண்டுமானல், நாமெல்லோரும் கத்தோலிக்க பத்திரிகைகளைப் பரப்பும் அப்போஸ்தலர்களாய் இருக்கவேண்டும். இந்தப் பிரசிங்களுக்கு கிரிகைக்கு நாம் பின்வாங்கலாகது.

* * *

பிரான்ஸ்தேச அர்ச். லூயிஸ்அரசர் முக்கியமான எந்தஅலுவலையும் சிலுவையடையாளம் வரைந்தபின்பே செய்வார், யாராவது அதைக் கண்டு அதிசயப்பட்டால் நான்சிறுபிள்ளையாய் இருக்கும்போது என் தாய் எனக்குப் படித்துக்கொடுத்த நல்ல வழக்கம் இதுஎன்பார்.

> "இருபதுவயதுள்ள வாலிபனின் இருதயத்தைப் பரிசுத்தமாய்க்காப்பாற்ற அவசியமானதென்ன தெரியுமா? திவ்வியநன்மையும், தேவமாதாவின் பக்தியுமே" — அர்ச். பிலிப்நேரியார்.

## கண்டு பிடியுங்கள்

கடலிலே ஒருகப்பல் தங்கிநிற்கின்றது. அந்தக்கப்பலில் இருந்து ஒரு ஏணி தொங்கவிடப் பட்டிருக்கிறது. அது நீர்மட்டத்தின்கீழ் 6 அடி 9 அங்குலமும், நீர்மட்டத்தின்மேல் 15 அடி 10 அங்குலமும் உள்ளது. கடலில் மழைபெய்ததால் கடல்நீர் மணிக்கு 9அங்குலவீதம் உயர்கின்றது. ஆகவே, ஆறு மணித்தியாலத்தின்பின் நீர்மட்டத்தின்கீழ் ஏணி எத்தனைஅடி தாழ்ந்திருக்கின்றது.

அ. அருளானந்தம்,
கொறி றோட், தெகிவலை.

## புங்குடுதீவுத் தபால்

சென்ற 17-4-54 காலை 8-30 மணிக்கு இங்குள்ள கத்தோலிக்கபாடசாலை மண்டபத்திலே புங்குடுதீவுக் கிராமச்சங்கதலைவர் தலைமையில் விசேஷ பொதுக்கூட்டம்ஒன்று ஆரம்பமாகி நடந்தேறியது. அவ்வமயம் கத்தோலிக்கமக்கள்சார்பாகத் தலைவர் அவர்களை வரவேற்றுத் திரு. வி. அமிர்தவாசகம்என்பவர் ஓர் வரவேற்புப்பா படித்தனர். திரு. க. பே. மார்சலின்என்பவர் ஓர்விண்ணப்பபத்திரம்படித்து அவரிடம்சமர்ப்பித்தனர். திரு. வி. லீனஸ் "தலைவர்பணி" என்பதுபற்றியும், திரு. சி. பே. மார்செலின் "நாட்டிற்கு நற்பணிசெய்த தலைவர்கள்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அதன்மேல் தலைவர் பேசியவிடத்து: உங்களுக்குள்ளகுறைகளை நான்அறிவேன்; ஆனல்நீங்கள் இப்பொழுது ஒருகுறையைமாத்திரமே தெரிவித்திருக்கிறீர்கள்; நான்கிராமவட்டார அங்கத்தவராகத் தெரியப்பட்டகாலமுதல் உங்கள் குறைகளை நீக்கவேண்டுமென ஆவல்கொண்டுள்ளேன்; தற்போது நடைபெறுவது ஜனநாயக ஆட்சியே; மக்கள்விரும்பாது அரசாங்கம் தன்இஷ்டப்படி எதையும் துணிந்துசெய்ய முடியாது; எனவே, உங்கள் சமுதாயத்துக்கு வேண்டிய கிராமஅங்கத்தவர்களேயோ, அன்றேல் மறுதேவைகளையோ என்னிடம்கேட்கலாம்; நானும் இயன்றவரைசெய்ய ஆயத்தமாயிருக்கிறேனெனக் கூறிநின்ருர். ஈற்றில்கத்தோலிக்க மகாசபைக் காரியதரிசி ச. அ. மனுவேற்பிள்ளை கூறிய நன்றியுரையோடு கூட்டம்முடிவெய்திற்று.

காரியதரிசி

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் அருளாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார் இவர்களின்மன்ருட்டாலும், எனதுசகோதரிக்கும், மகளுக்கும், மாறிமாறிச் செய்யப்பட்ட சத்திரவைத்தியமும், இடையிடையே தலைகாட்டிய குத்துவருத்தமும் குணமடைந்து வருகிறது. இன்னும் பூரண சுகத்தைக் கொடுப்பார்களென்று நம்பியிருக்கிருேம். இன்னும்மகளுக்கு படிப்பித்தலுக்கு ஒருஇடமும் கிடைத்தது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

சில்லாலை. A. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

—:—

### உணவுப்பொருள் இறக்குமதி

இலங்கையிலே சென்ற 1954-ம் ஆண்டில் 47கோடியே 28லட்சத்து 24ஆயிரத்து 242ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப் பட்டிருப்பதாகத் திறைசேரித் தற்காலிக உபகாரியதரிசி அவ்வருடத்திற்கான பரிபாலன அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். சீனாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இறக்குமதிசெய்யப்பட்ட அரிசிக்கென்றுமாத்திரம் செல்லக்கட்டிய பணம் முறையே 17கோடியே 73லட்சத்து 80ஆயிரத்து 124ரூபாவும், 11கோடியே 63லட்சத்து 12ஆயிரத்து 193 ரூபாவுமாகும். இதுதவிர, சென்ற வருடம் இறக்குமதிசெய்யப்பட்ட கோதுமைமாவின்விலை 11கோடியே 16லட்சத்து 79ஆயிரத்து 214ரூபா. சென்றவருடம் இறக்குமதிசெய்த 1,81,006 தொன்சீனியின்விலை 5கோடியே 15 லட்சத்து 20ஆயிரத்து 866ரூபாவாகும்.

### மலாயரும் செனற்சபையும்

இலங்கையிலே மலாயசமூகத்தினராய் இருபத்தெண்ணாயிரம் பேர்வரையிலே இருந்துவருகின்றனர். முன்னர் இருந்த அரசாங்கசபையில் ஜனாப் எம். கே. சல்டின், ஜனாப் டி. பி. ஜாயா எனும் மலாயர்இருவரும் அங்கத்தவர்களாய் இருந்தபடியால் மலாயசமூகத்தினர் மனத்திருப்தி யடைந்திருந்தனர். ஆனால், இப்போது சனப்பிரதிநிதிகள் சபையிலோ, அன்றேல் செனற்சபையிலோ அவர்களின்சாகியத்தினர் எவருமேயில்லை. இது விஷயமாய் மூதூர்ப்பிரதிநிதியான ஜனாப் எம். ஈ. எச். முஹம்மதலிஅவர்கள் செய்துகொண்ட மனுவிற்குப் பிரதமர்அனுப்பிய பதிலிலே, தகுதிவாய்ந்த மலாயப் பிரமுகர்ஒருவர் கிடைப்பாராயின் அவரைச் செனற்சபையில் ஓர்அங்கத்தவராக நியமிப்பதுபற்றித் தாம் ஆலோசிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.

### எதிர்க்கட்சி அபேட்சகர்கள்

அடுத்துநிகழவிருக்கும் அழுத்துநுவரைத்தொகுதி உபதேர்தலிலே சனப்பிரதிநிதிகள்சபையின் எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரேஅபேட்சகரை நிறுத்துவதில் தோல்வியடைந்துள்ளன. லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்தகட்சியும் அந்தஸ்தானம் தன்தன் அபேட்சகருக்கே உரியதென்றுகூறி உரித்தாடிக்கொண்டு நிற்கின்றன. தனதுகட்சியின் அபேட்சகராகத் தெரியப்பட்டுள்ள திரு. தயாகுணசேகர என்பவர்தான் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகரைத் தோற்கடிக்கக்கூடிய நல்லதிர்ஷ்டத்தைக் கொண்டிருக்கிறார்; ஏனெனில், ஊவாப்பகுதியில் நெடுங்காலமாக அவர் தனதுகட்சியின் தீவிரஉழைப்பாளியாக இருந்துவருவதை முன்னிட்டு அழுத்துநுவரைத்தொகுதியில் பிரஸ்தாபம்பெற்றவராய் இருக்கின்றார்; இன்னும்அவர் பதுளைப்பட்டினசங்க தலைவராயும் இருந்தார்; ஆகவே, அவருக்குத்தான் அந்தஸ்தானத்துக்கு அபேட்சகராக வரஉரித்துண்டென்று லங்காசமசமாஜ கட்சியின் செயலாளரான திரு. லெஸ்லி குணவர்த்தன கூறுகின்றார். தனதுகட்சியின் அபேட்சகராகத் தெரியப்பட்டுள்ள திரு. கே. பி. ஹெறுத் என்பவர் அழுத்துநுவரைத் தொகுதியைச் சேர்ந்தவர்; சென்றபொதுத் தேர்தலில் அந்தஸ்தானத்துக்கு அவர் அபேட்சகராகநின்றுபோட்டியிட்டார்; அதனால் சமசமாஜக்கட்சி அபேட்சகருக்குச் சலுகைகாட்டி விட்டுக்கொடுக்க ஒருகாரணமும் இல்லை; ஆகவே, அந்தஸ்தானத்துக்குப் போட்டியிட அவருக்கேஉரிமையுண்டென்று கம்யூனிஸ்தகட்சியின் மத்தியகம்மிற்றி அங்கத்தவர்ஒருவர் கூறுகின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியும்கடைசிமட்டும் அழுத்துநுவரை ஸ்தானத்துக்குப் போட்டி யிடுகிறதுதானென்று முடிவுகட்டியிருக்கிறது. தங்கள்கட்சி அபேட்சகரான திரு. சி. பி. டபிள்யு. பல்லகொலஅவர்களைக்காட்டிலும் மற்றெந்த இடதுசாரிக்கட்சிகளின் அபேட்சகர்களுக்கும் அங்கே வெற்றிபெறும் அதிர்ஷ்டமில்லையென்று அக்கட்சியினர் அபிப்பிராயப்படுகின்றனர். இதற்கிடையில் எதிர்க்கட்சிகளைச்சேர்ந்த சிலஅங்கத்தவர்கள் சேர்ந்து, அழுத்துநுவரை ஸ்தானத்துக்கு ஒருதனிஅங்கத்தவரை அமர்த்துமாறு ஆனமட்டும் பாடுபடுகின்றனர். அவ்விதம் அமர்த்துவதில் அவர்கள் பிரதிகூலமடைந்தால் தேர்தல்போராட்டத்திலிருந்தே முற்றாக விலகிக்கொள்வார்கள்போல் இருக்கிறது.

—

## நானா சங்கதிகள்

● ஜெருசலேம்நகரிலே ஜெத்செமனியதோட்டத்திலுள்ள பிரான்சீஸ்கன்மகாலயத்துக்கு அணித்தாகப் புராதனமரமொன்று நிற்கின்றது. நம்முடைய திவ்வியகர்த்தர் தமதுமரணாவஸ்தையின்போது இந்தமரத்திற்றான சாய்ந்து ஆறியிருந்தாரெனப்பாரம்பரியமாக நம்பப்படுகிறது. அதனால் பிரான்சீஸ்கன்சபைக் குருமார் இதனைச் சாவதானமாகப் பேணிவருகின்றார்கள்.

● முற்காலத்திலே தபசுகாலத்தில் முட்டைகளை உணவாகப்பாவிப்பது முற்றாகவிலக்கப்பட்டிருந்தது. பின்னர் பாஸ்குஞாயிறன்று மக்களது சந்தோஷத்தின்அறிகுறியாக அவைகள் சிவப்புவர்ணம்பூசி உணவுமேசைகளில் கொண்டுவரப்படும். இதுகாரணமாகவே ஈஸ்றருக்கும், முட்டைகளுக்கும் தொடர்புஏற்படலாயிற்று.

● பிரித்தானியஅரசின் முன்னைநாள்பிரதமரான சேர்வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்கள் இத்தாலியின் தென்பகுதியிலுள்ள சிசிலி தீவுக்குச்சென்று அங்குள்ள புராதனதுறைமுகப் பட்டணமாகிய சைறுக்குஸ்நகரிலே தமது ஈஸ்றர்விடுமுறையைக் கழித்துவருகின்றார். பிரித்தானியில் பொதுத்தேர்தல் நடக்கவிருப்பதால் அவர் தமதுஸ்தானத்துக்குப் போட்டியிட விரைவிலே அங்குசெல்வார்போல் இருக்கிறது.

● மரியன்னையின் வருடத்திலே பன்னிரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட திருயாத்திரிகர்கள் லொறேத்தோபதியிலுள்ள திருக்குடும்பத்தின் பரிசுத்த வீட்டைத் தரிசித்திருக்கிறார்கள். இவர்களிலே அதிகாரபூர்வமான 6,000 கோஷ்டிகளைச்சேர்ந்த யாத்திரிகர்களும் அடங்குவார்கள். அப்பரிசுத்தமனைக்குமேலாக இருந்துவரும் மகாலயத்திலே அவ்வருடத்தில் 33,500 திவ்வியபூசைகள் நிறைவேறியிருக்கின்றன.

● பிரித்தானிய பாராளுமன்றம் அடுத்தவைகாசிமாதம் 6-ந்திகதியன்று மகாராணியாரால் கலைத்துவிடப்படும். பொதுத்தேர்தல் முடிந்தபின் புதிய பாராளுமன்றம் ஆனிமாதம் 4-ந்திகதி மகாராணியாரால் வழமைபோல விசேஷ வைபவங்களுடன் திறந்துவைக்கப்படும். தேர்தலில் வெற்றிபெற அங்குள்ள ஒவ்வோர்கட்சியும் இப்போதே பரபரப்பாக வேலைசெய்யத் தொடங்கிவிட்டன.

● பிரித்தானியிலே அடுத்துநிகழும் வைகாசிமாதம் 26-ந்திகதியன்று பொதுத்தேர்தல்நடத்தத் தாம் தீர்மானித்திருப்பதாக அத்தேச புதியபிரதமரான சேர் அந்தோனி ஈடன்அவர்கள் சென்ற 15-ந்திகதி வெள்ளிக்கிழமை யிரவு வானொலிமூலம் அறிவித்திருக்கிறார். பிரதமரானபின் முதற்தடவையாக அவர் தேசமக்களுக்கு விடுத்த செய்தியிலே, பாராளுமன்றத்தை வைகாசிமாதம் 6-ந்திகதி கலைத்துவிடுமாறு எலிசபேத் மகாராணியாரைக் கேட்டிருப்பதாக [illegible]னர்.

## —: அறிவுச் சுடர் :—

❋ இலங்கையில் எத்தனை பொலிஸ் நாய்கள் இருக்கின்றன?

இலங்கையில் 12 பொலிஸ்நாய்கள் இருக்கின்றன. இவற்றுள் 6 நன்றாகப் பயிற்சிபெற்றவை. 6 நன்றாகப் பயிற்சிபெறாதவை. பொலிஸ் நாய்களைப் பழக்கும்நிலையம் கட்டுக்குருந்தை எனுமிடத்திலுள்ளது. அல்சாசியன், தூ பேர்மன் பின்சர்என்னும் ஜேர்மன் சாதிநாய்களே பொலிஸ்நாய்களாகப் பழக்கப்படுகின்றன.

❋ பொலிஸ்நாய் என்பதுஎன்ன?

பொலிஸ்நாய் என்பது, பொலிஸ்காரர் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவிசெய்யும்நாய். கொலை அல்லது களவு நடந்த ஒருஇடத்தில் கொலைசெய்தவன், அல்லது களவெடுத்தவன் விட்டுச்சென்றஒருபொருளைப் பொலிஸ்நாயின் மூக்கில் மணக்கக்கொடுத்தால் அந்நாய் மோப்பம்பிடித்துக் கொலையாளி அல்லது கள்வன் இருக்கும் இடத்துக்குச் சென்று குற்றவாளியைக் காட்டும். பொலிஸ்காரர் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவிசெய்கின்றமையின் இவைகள் பொலிஸ்நாய்கள்எனப்படுகின்றன.

பொலிஸ்நாய் வெவ்வேறு ஆட்களின் மணத்தை எப்படி அறியும்?

மனிதஉடலிலும், பிராணிகளின் உடலிலுமுள்ள நுண்ணியதுவாரங்கள் வழியாக ஒருவகை எண்ணெய்ப் பொருள் இடைவிடாது வெளியே வந்துகொண்டிருக்கிறது. எப்படி இரண்டு மனிதரின் கையடையாளங்கள் ஒரேவகையாக இருப்பதில்லையோ அப்படியே மனிதஉடலிலிருந்து வெளிவரும் இப்பொருளின் மணமும் வெவ்வேறுவகையாகஇருக்கும். இந்தத் துகள்கள் காற்றுமூலம்சென்று நாயின்மூக்கை அடையும்போது அது அம்மணத்தை அறிந்துகொள்ளுகிறது. ஒருவன் நடக்குமநிலத்திலும், தொடும்பொருள்களிலும் இந்தத்துகள்கள் ஒட்டிக்கொண்டுகிடக்கும்.

---

● புதிதாகத் தெரிவுசெய்யப்படும் பாப்பானவரைச் "செதுவாஜெஸ் தாத்தோறியா" எனப்படும் சிவிகையில்அமர்த்திச் சம்பேதுருவானவர் மகாலயத்திற்குச் சுமந்துசெல்லும் வழக்கம் மூன்றாவதுமுடியப்பர் எனும் பாப்பானவர் கி.பி. 752-57-இல் தெரிவுசெய்யப் பெற்றபோதுதான் ஆரம்பமாயிற்று. அவ்வேளைஏற்பட்ட பாமோற்சாகம்காரணமாகச் சனங்கள் அவரைத் தோள்களில்சுமந்து அர்ச். லத்தறன் அருளப்பர் மகாலயம் கொண்டுசென்றார்கள்.

● தமது வலதுபுஜத்தில்உண்டாகித்தம்முடைய இராஇளைப்பாற்றியைக் குழப்பிக்கொண்டுவருவதும், இடையிடையே தமதுகணையாழியை இடதுகரத்தில் அணிந்துகொள்ளவேண்டிய சங்கடத்தை உண்டுபண்ணுவதுமான வாதசம்பந்தமான உபாதி இருந்தபோதிலும் பரிசுத்தபாப்பரசர் அதிகம் சுகவிருத்தியடைந்தவராய்த் தமது நாளாந்த கடமைகளைச் சுமுத்திரையாகச் செய்துவருகின்றார். சமீபவருடங்களில் 10ஸ்ரோன் 6றாத்தலாயிருந்த அவரதுசரீரநிறை இப்போது 11ஸ்ரோன் 9றாத்தலாயிருக்கிறது.

● சென்னைஇராச்சியத்திலே அரிசிமில்களுக்குப்புதியலைசென்ஸ்கள் வழங்கப்படாதென்று சென்னைஅரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. உலக்கைகொண்டு நெல்குத்தும் தொழிலுக்கும், கைக்குத்தரிசிப் பாவனைக்கும் ஊக்கம் அளிக்கும் நோக்கமாகவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைக்குத்தரிசிப் பாவனைக்கு ஊக்கமளிக்க

## சபிக்கப்பட்டவர்களே! ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம். அதற்கு இந்தப்பயங்கர ஆயத்தம்! அன்றுதானே மனந்திரும்பினாள். இன்று பரலோக இராச்சியத்தில் ஓர்பெரும் அர்ச்சியசிட்டவளாய் விளங்குகிறாள். அதனால் இவ்விதபாவங்களுக்கு ஒருவர் தன்னைக் கையளித்தால் அவர் மறுமைச்சீவியத்தில் தேவநீதிச் சிம்மாசனத்தின்முன் பாசக் கணக்குக்கொடுக்க நிறுத்தப்படும்போது, போக்குச்சொல்ல இடமில்லை. ஏனெனில், "தெரியாமல் தண்டனைக்குரியதைச் செய்தவன், சிறுகஅடிபடுவான். தெரிந்துகொண்டு தண்டனைக்குரியதைச் செய்தவனோ அதிகமடிபடுவான்." என்பதுகர்த்தரின் திருவாக்காகும். (லூக். 12: 47. 48).

(தொடரும்)

---

முதல் வருட

### மரணஞாபகம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24—6—36 | 21—4—54 |

"ஆண்டவரே! உமது இல்லத்தின் வனப்பை விரும்பினேன். உமது வாசஸ்தலத்தை விரும்பினேன்." (சங். 15)

ஜெயநாதன் ஜேம்ஸ்
பரலோக பிராப்தியான
முதல்வருட ஞாபகதினம்
21—4—55.

இவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக அன்றையத்தினம் சில்லாலை ஆரோக்கியமாதா ஆலயத்தில் திவ்விய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். அன்னவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நீ. ஜேம்சும் பாரியாரும்
வ. இம்மனியலும் பாரியாரும்

---

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் மூதற்தேவநற்கருணை ஆதாயநிதிச்சங்கப் பத்தாவது வருடாந்த பொதுக்கூட்டம் 1-5-55 ஞாயிறுவாரம் பிற்பகல் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின்னர் யாழ்ப்பாணம் சென்சாள்ஸ் பாடசாலையில் நடைபெறும். அத்தருணம் அங்கத்தவர்களும் அபிமானிகளும் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், 18-4-55.
ச. மரியாம்பிள்ளை, (செயலாளன்.)

---

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 29-ந்திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். அவ்வமயம் மூன்றுசகோதரிகள் தங்கள்நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். வைகாசிமாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள்:— 17, 18, 19 (2), 20, 21, 30, 31. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடியநாட்கள்:— 19, 29.

A. S. FRANCIS OF MARY
for Director

---

மேலும் என்னநடவடிக்கை அவசியமென்பதுபற்றிப் பரிசோதனை செய்யவும் சென்னைஅரசாங்கம் தீர்மானித்துள்ளது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 21-1955.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org